1. தெசலோனிக்கேயர்

மக்கெதோனியா பகுதி பிலிப்பி, தெசலோனிக்கேயா பட்டணங்களை உள்ளடக்கியதாகும். தெசலோனிக்கேயா, துறைமுகமும், வியாபார மைய ஸ்தலமுமாயிருந்தது. பவுல் வாழ்ந்த காலத்தில் இங்கு சுமார் 200,000 மக்கள் வாழ்ந்திருப்பார்கள்.

வரலாற்றுப் பின்னணி

எருசலேமில் ஆலோசனைச் சங்கம் கூடிய சில காலத்திற்குப் பின்னர் பவுல் சீலாவைத் தெரிந்து கொண்டு தனது இரண்டாம் சுவிசேஷப் பிரயாணத்தை மேற்கொண்டார் (அப்போஸ்தலர் 15:36,40). தீமோத்தேயு லீஸ்திராவில் இவர்களுடன் சேர்ந்து கொண்டார் (அப்போஸ்தலர் 16:1-3). லூக்கா துரோவாவிலிருந்து பிலிப்பி வரைக்கும் இவர்களுடன் பிரயாணஞ் செய்து, அங்கேயே தங்கி விட்டார் (அப்போஸ்தலர் 16:10-40).

பவுல் பிலிப்பி ஊழியத்திற்குப் பிறகு தெசலோனிக்கேயாவுக்குச் சென்றார். இங்கு அவர் குணப்பட்டவர்கள் அநேகரை ஆதாயப்படுத்திக் கொண்டார். இவர்களில் சிலர் யூதர்களும், அநேகர் கனம்பெற்ற ஸ்தீரிகளும், மற்றும் திரளானோர் புறஜாதிகளுமாயிருந்தார்கள். பவுல் இரவோடிரவாகத் தெசலோனிக்கேயாவை விட்டுப் புறப்பட வேண்டியதாயிருந்தது. அவர் பெரோயாவில் சில காலம் தங்கியிருந்து விட்டு, கடைசியாக அத்தேனே பட்டணம் சென்றார் (அப் 17:10-15). தீமோத்தேயு பெரோயாவில் தங்கிவிட்டார். சில காலத்திற்குப் பிறகு இவர் அத்தேனேயில் பவுலைச் சேர்ந்து கொண்டார். தெசலோனிக்கேயாவிலுள்ள சபையைச் சந்திக்கும்படிக்கு பவுல் தீமோத்தேயுவை அனுப்பினார் (1தெசலோனிக்கேயர் 3:1-5).

பவுல் அத்தேனே பட்டணத்தை விட்டு, தொடர்ந்து கொரிந்துவுக்குச் சென்றார். இங்கு அவர் ஒரு வருஷமும், ஆறு மாதமும் ஊழியஞ் செய்தார் (அப் 18:11).

பவுல் கொரிந்துவில் இருந்தபொழுது தீமோத்தேயு தெசலோனிக்கேயா சபையிலிருந்து நற்செய்தி கொண்டு வந்தார் (1தெசலோனிக்கேயர் 3:6). தீமோத்தேயுவின் அறிக்கையின் முகாந்தரம் பவுல் 1 தெசலோனிக்கேயர் நிருபத்தை எழுதினார். இதற்குப் பின்னர் தெசலோனிக்கேயாவிலிருந்து பவுலுக்குக் கூடுதல் தகவல் கிடைத்தது போலிருக்கிறது. இதன் விளைவாகவே, அவர் 2தெசலோனிக்கேயர் நிருபத்தை எழுதினார் (2 தெசலோனிக்கேயர் 2:2; 3:11).

பொருளடக்கமும், அதன் சுருக்கமும்

தெசலோனிக்கேயர்கள் அஞ்ஞானத்திலும், துன்மார்க்கத்திலுமிருந்து அப்பொழுதுதான் இரட்சிக்கப்பட்டிருந்தார்கள். அவர்கள் உபத்திரவங்களுக் கூடாக சென்று கொண்டிருந்தார்கள். கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறித்தும் அவர்கள் குழப்பமடைந்திருந்தார்கள். ஆதலால், அவர்களுக்கு எழுதின தனது நிருபங்களில் இந்த விஷயங்களுக்கு முக்கியத்துவம் அளித்தார். இரண்டு நிருபங்களும் ஒரே விதமான மையப்பொருளைக் கொண்டுள்ளது. இருப்பினும், விஷயங்களில் வித்தியாசங்கள் உள்ளன.

அ. தெசலோனிக்கேயருடன் தனக்கிருந்த உறவைப் பற்றிய விரிவான விவரத்தைப் பவுல் முதலாம் நிருபத்தில் நமக்களிக்கிறார். இந்த உறவைப் பற்றிய எந்தக் குறிப்பும் இரண்டாம் நிருபத்தில் இடம்பெறவில்லை.

ஆ. ஏற்கெனவே கிறிஸ்துவுக்குள் மரித்தவர்களுக்கு என்ன சம்பவிக்கும் என்பதை முதலாம் நிருபம் விளக்குகிறது.

1. தெசலோனிக்கேயர்

கர்த்தரின் நாள் வருவதற்கு முன் வெளிப்படவிருக்கிற "அக்கிரமக்காரன்" பற்றி இரண்டாம் நிருபத்தில் விவரிக்கப்பட்டுள்ளது.

1 தெசலோனிக்கேயரில் பவுல் இரண்டு கேள்விகளுக்குப் பதில் அளிக்கிறார்: இயேசுவின் வருகைக்கு முன்னர் கிறிஸ்துவுக்குள் மரித்த விசுவாசிகளுக்கு என்ன சம்பவிக்கும்? *(4:13-18)*. கிறிஸ்து எப்போது மீண்டும் வருவார்? *(5:1-11)*.

2 தெசலோனிக்கேயரில் பவுல் பதிலளிக்கும் கேள்விகளாவன: கிறிஸ்துவின் வருகைக்கு முன்னர் நிகழவிருக்கும் சம்பவங்கள் என்னென்ன? பவுல் மூன்று காரியங்களைச் சுருக்கி வரைகிறார்: தேவனுக்கு விரோதமாகப் பெரும் துரோகம் நேரிடும் *(2:3)*, அக்கிரமத்தின் வல்லமையைத் தடைசெய்கிறவர் நீக்கப்படுவார் *(2:6,7)*, அக்கிரமக்காரன் தேவனுடைய ஆலயத்தில் தேவன் போல உட்கார்ந்து, தன்னைத்தான் தேவனென்று காண்பிப்பான் *(2:4,9)*.

இ. முதலாம் நிருபத்தில், வேலையில்லாமல் சோம்பலாய் இருப்பவர்களைப் பவுல் எச்சரித்தார்; இரண்டாம் நிருபத்தில், வீண் அலுவல்காரரை எச்சரிப்பதுடன், அவர்களுக்கு வெட்கமுண்டாகும்படிக்கு அவர்களுடன் கலவாதிருக்கும்படி அவர் எழுதுகிறார்.

ஈ. முதலாம் நிருபத்தில் மோக இச்சைக்குட்பட்டவர்களை எச்சரிக்கிறார்; இரண்டாம் நிருபத்தில், விசுவாசத்தில் உறுதியாக நிற்கும்படிக்கு விசுவாசிகளை ஊக்குவிக்கிறார்.

கர்த்தருடைய இரண்டாம் வருகையைப் பற்றி தவறான எண்ணங்கொண்டவர்களுக்கும், விக்கிரகங்களை விட்டுத் தேவனிடத்திற்கு மனந்திரும்பினவர்களுக்கும் தேவையாயிருந்த போதனையை இவ்விரு நிருபங்களும் விளக்குகின்றன.

1தெசலோனிக்கேயர்: கிறிஸ்துவின் வருகையின் நம்பிக்கை

1. வாழ்த்தும், நன்றி நவிலலும் *(1:1-10)*.
2. பவுலின் ஊழியத்தின் ஆய்வு *(2:1-16)*
3. தெசலோனிக்கேயரைச் சந்திக்கும்படியான பவுலின் வாஞ்சை *(2:17-3:5)*.
4. தீமோத்தேயுவின் அறிக்கை *(3:6-13)*.
5. கிறிஸ்தவ வாழ்க்கையைப் பற்றிய புத்திமதி *(4:1-12)*.
6. கர்த்தரின் இரண்டாம் வருகையைப் பற்றிய சத்தியங்கள் *(4:13-5:11)*.
7. இறுதி புத்திமதி *(5:12-28)*.

2தெசலோனிக்கேயர்: கிறிஸ்துவின் வருகையின் ஜெயம்

1. நன்றி நவிலலும், வேண்டுதலும் *(1:1-12)*.
2. கர்த்தரின் நாளைச் சூழ்ந்துள்ள சம்பவங்கள் *(2:1-12)*.
3. கர்த்தருக்குள் ஸ்திரமாயிருக்கும்படியானப் புத்திமதி *(2:13-17)*.
4. வேண்டுதலும் கட்டளையும் *(3:1-15)*
5. முடிவுக் குறிப்புகள் *(3:16-18)*.

1. தெசலோனிக்கேயர்

முக்கியத் தகவலின் மறுபார்வை

1. பவுலின் இரண்டாம் சுவிசேஷப் பிரயாணத்தில், எருசலேம் ஆலோசனைச் சங்கத்திற்குப் பிறகு 1,2 தெசலோனிக்கேயர் நிருபங்கள் எழுதப்பட்டன.

2. தெசலோனிக்கேயருடன், பவுலுக்கிருந்த உறவின் விரிவான விபரம்; ஏற்கெனவே கிறிஸ்துவுக்குள் மரித்தவர்களுக்கு என்ன சம்பவிக்கும் என்பதின் விளக்கம்; சோம்பலும், மோக இச்சையும் உள்ளவர்களுக்கான எச்சரிப்பு ஆகியவை 1 தெசலோனிக்கேயரில் இடம் பெற்றுள்ளன.

3. தெசலோனிக்கேயருடன் பவுலுக்கிருந்த உறவின் சிறு குறிப்புகள், கர்த்தரின் நாளுக்கு முன் வெளிப்படவிருக்கும் "அக்கிரமக்காரனின்" விளக்கம்; சோம்பலுள்ளவர்களுக்கும், சோம்பலுள்ளவர்களுடன் சேர்ந்திருப்பவர்களுக்குமான எச்சரிப்பு; விசுவாசத்தில் உறுதியாக நிற்கும்படிக்கு ஊக்கமளித்தல் ஆகியவை 2தெசலோனிக்கேயரில் இடம் பெற்றுள்ளன.

4. கர்த்தருடைய இரண்டாம் வருகையைப் பற்றிக் குழப்பமடைந்திருந்த விசுவாசக் கூட்டத்தாருக்கும், அப்பொழுதுதான் விக்கிரகங்களை விட்டு மனந்திரும்பினவர்களுக்கும் தேவையாயிருந்த போதனை இவ்விரு நிருபங்களிலும் இடம் பெற்றுள்ளன.

தெசலோனிக்கேயில் அப்போஸ்தலர்களின் ஊழியம் (1தெசலோனிக்கேயர் 2:1-16)

முன்னுரை

அ. பவுலும் அவரோடிருந்தவர்களும் உண்மையற்றவர்களெனத் தெசலோனிக்கேயில் குற்றஞ்சாட்டப்பட்டனர். அவர்கள் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, புதிதாகக் குணப்பட்டவர்களை சீஷராக்கிக் கொண்டிருந்ததைப் பார்க்கிலும், மனுஷரின்மத்தியில் தங்களை உயர்த்துவதிலும், பணம் ஈட்டுவதிலும் அவர்கள் மிகுந்த நாட்டம் உடையவர்களாக இருந்தார்கள் என அவர்களுடைய சத்துருக்களை பறைசாற்றிக் கொண்டிருந்தார்கள்.

ஆ. இது படுமோசமானதோர் குற்றச்சாட்டு ஆகும். ஏனெனில், சபைகளின் சுவிசேஷ ஊழியக் கால கட்டத்தில், இத்தகைய தூய்மையற்ற எண்ணங்களை மனதிற் கொண்டிருந்த, தேசாந்திரிகளான பிரசங்கிகளும், தத்துவ ஞானிகளும், மந்திரவாதிகளும், பட்டணம் பட்டணமாக அலைந்து திரிகிறவர்களும் ஏராளமானோர் இருந்தனர்.

இ. எனவேதான் பவுல், தானும் தன்னோடிருந்தவர்களும் அவர்களோடுட கூட இருந்தபொழுது, எவ்வண்ணமாகப் பாடுபட்டார்கள், எவ்விதம் நடந்து கொண்டார்கள் என்பதைத் தெசலோனிக்கேயில் உள்ள விசுவாசிகளுக்கு நினைப்பூட்டுகிறார். அவர்கள் உண்மையற்றிருந்தார்கள் என அவர்களுடைய சத்துருக்களால் சாட்டப்பட்டக் குற்றச்சாட்டுகளை மறுப்பதற்கு இது போதுமானதாக இருந்திருக்கும்.

1. அப்போஸ்தலர் உத்தம இருதயத்தோடு ஊழியஞ்செய்கின்றனர். (2:1-6).

அ. வசனம் 1. "நாங்கள் உங்களிடத்தில் பிரவேசித்தது வீணாயிருக்கவில்லை". பவுலின் தெசலோனிக்கே பயணம் விருதாவாயிருக்கவில்லை. பவுலும், அவரோடிருந்தவர்களும் இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்பொழுது திரளானோர் விசுவாசித்தார்கள். ஓர் சபையும் இப்பட்டணத்தில் துவக்கப் பட்டது.

ஆ. வசனம் 2. "நாங்கள் வெகுபோராட்டத்தோடே சுவிசேஷத்தைச் சொல்லும்படி தைரியங் கொண்டிருந்தோம்". "மக்கெதோனிய அழைப்புக்குப்" (அப்போஸ்தலர் 16:9). பிற்பாடு, பவுலும், அவரோடிருந்தவர்களும் பிலிப்பியில் அடிமைப் பெண்ணுக்குள்ளிருந்த குறிசொல்லும் ஆவியைத் துரத்தியதின் விளைவாக, பவுலும் சீலாவும் அநேக அடிகள் அடிக்கப்பட்டு, சிறைச்சாலையில் போடப்பட்டனர். (அப்போஸ்தலர் 16:22,23). தெசலோனிக்கேயில் பொறாமை கொண்ட யூதர்களில் சிலர் கூட்டங்கூடி அவர்களுக்கு விரோதமாக முழுப்பட்டணத்தையும் தூண்டிவிட்டப்படியால், இரவோடிரவாக அவர்கள் புறப்படும்படி பலாத்காரம் பண்ணப்பட்டனர். (அப்போஸ்தலர் 17:5,8,10). "வெகுபோராட்டம்" எனப் பவுல் குறிப்பிடுவது இந்தச் சம்பவமேயாகும்.

இ. வசனம் 3. "எங்கள் போதகம் வஞ்சகத்தினாலும் துராசையினாலும் உண்டாகவில்லை". பாவமன்னிப்பையும், தேவசமூகத்திலுள்ள ஆறுதலையும் அடைந்து கொள்ளும் படிக்கு கிறிஸ்துவினிடத்தில் வரும்படியாகத் தெசலோனிக்கேயில் உள்ளவர்களுக்குப் பவுல் போதித்தார். அவர்களைப் புண்படுத்தும்படி அவர் விரும்பவில்லை. அவர்களுக்கு உதவுவதே அவருடைய வாஞ்சை! மனந்திரும்பும்படி அவர் அருளிய போதனை இவ்விதமாயிருக்கவில்லை:-

1. வஞ்சகத்தின் அடிப்படையில் - மனுஷருடைய தவறான போசனையின்படி போதிக்கவில்லை.

தெசலோனிக்கேயில் அப்போஸ்தலர்களின் ஊழியம் (1தெசலோனிக்கேயர் 2:1-16)

பவுல், தனது சுவிசேஷத்தை இயேசுவிடமிருந்தே வெளிப்படுத்தலாகப் பெற்றிருந்தார் (கலாத்தியர் 1:11,12).

2. துராசையினால்- கற்புநெறிகெட்ட காரியங்களுக் காகப் போதிக்கவில்லை.

3. கபடமுள்ளதாய்- அவர்களிடமிருந்து ஏதேனும் பெற்றுக்கொள்ளும் நோக்கத்துடன் கவர்ச்சிகரமாக அல்லது சாமர்த்தியமாகத் திட்டமிடவுமில்லை.

ஈ. வசனம் 4. "தேவன் எங்களை உத்தமரென் றெண்ணினபடியே நாங்கள் பேசுகிறோம்." ஒருவரும் தன்னைத்தானே அப்போஸ்தலனாக (மிஷனரியாக) ஏற்படுத்த முடியாது. மேய்ப்பர், தீர்க்கதரிசி, சுவிசேஷகர், போதகர் முதலானோர்க்கும் இது பொருந்தும். இந்தச் சபைத் தலைவர்கள் இயேசுவினால் தெரிந்தெடுக்கப்பட்டு, கீழ்ப்படிவார்களோ என சோதிக்கப்பட்டு, அதன் பின் சபைக்கு ஈவாக அளிக்கப்படுகிறார்கள் (எபேசியர் 4:7,8,11). பவுலும், அவரோடிருந்தவர்களும் இவ்விதமாகத் தேவனால் அங்கீகரிக்கப்பட்டிருந்தார்கள். பவுலின் ஊழியத்திற்கானத் தேவ ஒப்புதலை வெளிப்படுத்தும்படிக்கு சிரியாவிலுள்ள அந்தியோகியாவிலுள்ள சபையில் ஆராதனை வேளையில் உண்டான தன்னுடைய தெய்வீக அழைப்பைப் பவுல் குறிப்பிட்டிருக்கக் கூடும். "அவர்கள் கர்த்தருக்கு ஆராதனை செய்து, உபவாசித்துக் கொண்டிருக்கிற போது: பர்னபாவையும், சவுலையும் நான் அழைத்த ஊழியத்துக்காக அவர்களைப் பிரிந்து விடுங்கள் என்று பரிசுத்த ஆவியானவர் திருவுளம் பற்றினார்" (அப்போஸ்தலர் 13:2; மேலும் காண்க அப்போஸ்தலர் 9:15,16).

உ. வசனம் 4-5. "நாங்கள் மனுஷருக்கு அல்ல, தேவனுக்கே பிரியமுண்டாகப் பேசுகிறோம்". கீழே கொடுக்கப்பட்டுள்ள உண்மையிலிருந்து இதைத் தெளிவாகக் காணலாம் எனப் பவுல் கூறுகிறார். அவர்கள்.

1. ஒருக்காலும் இச்சகமான வார்த்தைகளைப் பேசவில்லை.

2. பொருளாசையுள்ளவர்களாய் மாயம்பண்ணவில்லை.

3. மனுஷரால் வரும் மகிமையைத் தேடவில்லை.

பவுல் கலாத்தியரில் இவ்விதம் கூறுகிறார். "இப்பொழுது நான் மனுஷரையா, தேவனையா, யாரை நாடிப் போதிக்கிறேன்? மனுஷரையா பிரியப்படுத்தப் பார்க்கிறேன்? நான் இன்னும் மனுஷரைப் பிரியப்படுத்துகிறவனாயிருந்தால் நான் கிறிஸ்துவின் ஊழியக்காரனல்லவே" (கலாத்தியர் 1:10).

ஊ. வசனம் 6. "நாங்கள் கிறிஸ்துவின் அப்போஸ்தலராக உங்களுக்குப் பாரமாயிருக்கக் கூடியவர்களானாலும்". பாரம் என்பது சுமக்கப்படவேண்டிய பெரும்பளு அல்லது கனமான சுமையெனப்படும். இங்கே குறிப்பிடுவது, சபையானது அப்போஸ்தலரைப் பணத்தால் தாங்குவதாகும். பவுலும், அவரோடிந்தவர்களும் பண சகாயத்தையும், கிறிஸ்துவின் அப்போஸ்தலர்களுக்கான கனத்தையும் அவர்களிடம் நாடியிருந்திருக்கக் கூடியவர்களாக இருந்த போதிலும், அவர்கள் அவ்விதம் நாடவில்லை (1கொரிந்தியர் 9:3-14; 2கொரிந்தியர் 11:7-11; கலாத்தியர்6:6; 1தீமோத்தேயு 5:17,18).

எ. சுருங்கக் கூறுவோமானால், உண்மை அப்போஸ்தலர் (மிஷனரிமார், மேய்ப்பர், தீர்க்கதரிசி, சுவிசேஷகர் அல்லது போதகர்):

தெசலோனிக்கேயில் அப்போஸ்தலர்களின் ஊழியம் (1தெசலோனிக்கேயர் 2:1-16)

1. கர்பற்றவர்களும், பொருளாசையுள்ளவர்களும், மனுஷரால் வரும் புகழ்ச்சியையும் அங்கீகாரத்தையும் தேடுகிறவர்களுமாக இருக்க மாட்டார்கள்.

2. மனுஷரின் தவறான போசனைகள் அல்லது உபதேசங்களைப் போதிப்பதில்லை, அல்லது தந்திரத்தினாலும், வஞ்சகத்தினாலும் போதிப்பதில்லை.

1. கிறிஸ்துவின் சுவிசேஷச் செய்தியைப் போதிக்கின்றனர்.

2. எல்லாவற்றிலும் கர்த்தரைப் பிரியப்படுத்த முயற்சிக்கின்றனர்.

3. தைரியத்தோடும், சாந்தத்தோடும் ஜனங்களை உணர்த்துகின்றனர்.

2. பெற்றோர் தங்களுடைய பிள்ளைகளுக்குப் பணிவிடை செய்வதைப் போல அப்போஸ்தலர் ஊழியஞ் செய்கின்றனர் (2:7-12).

அ. வசனம் 7. "உங்களிடத்தில் பட்சமாய் நடந்து கொண்டோம்". பால் கொடுக்கிற தாயானவள் தன் பிள்ளைகளைக் காப்பாற்றுகிறது போல" பவுலும், அவரோடிருந்தவர்களும், தெசலோனிக்கேயில் உள்ள விசுவாசிகளுக்காகக் கரிசனை கொண்டிருந்தனர், அவர்கள் மூலம் இரட்சிக்கப்பட்டிருந்தவர்களை அவர்கள் கிறிஸ்துவுக்குள் பெற்றெடுத்திருந்தபடியால், அவர்களைக் கிறிஸ்துவுக்குள் குழந்தைகளாகக் கருதினார்கள்.

இந்நோக்கத்தினிமித்தமாகவே இயேசுவும் சீமோன் பேதுருவிடம், "என் ஆட்டுக் குட்டிகளை மேய்ப்பாயாக" எனக் கூறினார் (யோவான் 21:15).

ஆ. வசனம் 8. "நாங்கள் உங்கள் மேல் வாஞ்சையாயிருந்தோம்". அப்போஸ்தலர் தங்களைத் தாங்களே பலியாக அர்ப்பணித்தார்கள். அவர்கள் தெசலோனிக்கேயருக்கு சுவிசேஷ ஊழியத்தைச் செய்த பொழுது, கிறிஸ்துவில் இருந்த அதே அன்பை வெளிப்படுத்தினார்கள்.

1. கிறிஸ்து, "தம்மைத் தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷ சாயலானார் (பிலிப்பியர் 2:7).

2. "நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிறான்." (யோவான் 10:11).

3. கிறிஸ்து சிநேகிதருக்காகத் தம் ஜீவனைக் கொடுத்தார் (யோவான் 1:13).

4. அவர் தம்முடைய ஜீவனைக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம்" (1யோவான் 3:16).

5. "நான் உங்கள் நடுவிலே பணிவிடைக்காரனைப் போல் இருக்கிறேன்". (லூக்கா 22:27) எனக் கிறிஸ்து மொழிந்தார்.

இ. வசனம் 9. "உங்களில் ஒருவனுக்கும் பாரமாயிராத படிக்கு, இரவும் பகலும் நாங்கள் வேலை செய்து, தேவனுடைய சுவிசேஷத்தை உங்களிடத்தில் பிரசங்கித்தோம். அப்போஸ்தலர் தங்களுடைய ஊழியத்தைத் தாங்கும்படிக்கு உலக ரீதியான வேலையைச் செய்தார்கள். மற்ற நேரத்தை தெசலோனிக் கேயருக்கு சுவிசேஷ ஊழியத்தைச் செய்வதில் செலவிட்டனர். அந்நாட்களில் பவுல் கூடாரத் தொழில் செய்கிறவராயிருந்தார் என்பதில் ஐயமில்லை (அப்போஸ்தலர் 18:3).

தெசலோனிக்கேயில் அப்போஸ்தலர்களின் ஊழியம் (1தெசலோனிக்கேயர் 2:1-16)

ஈ. வசனம் 10. "விசுவாசிகளாகிய உங்களுக்குள்ளே நாங்கள் எவ்வளவு பரிசுத்தமும், நீதியும், பிழையின்மையுமாய் நடந்தோமென்பதற்கு நீதியும் சாட்சி, தேவனும் சாட்சி," அப்போஸ்தலர் விசுவாசிகளின் மத்தியில் வாழ்ந்து, ஊழியஞ்செய்தபொழுது பரிசுத்தமுள்ளவர்களாய் ஜீவித்தார்கள். தேவனுடைய பரிசுத்தக் கட்டளைகளின் அளவு பிறழாது வாழ்ந்தனர். அப்போஸ்தலரின் ஜீவியத்தில் தெசலோனிக்கேயர் குற்றங் கண்டுபிடிப்பதற்கான முகாந்தரம் ஒன்றுமேயிருக்க வில்லை.

உ. வசனம் 12. "தகப்பன் தன் பிள்ளைகளுக்குச் சொல்லுகிறது போல, நாங்கள் உங்களில் ஒவ்வொருவனுக்கும்.... சொன்னதை அறிந்திருக்கிறீர்கள்". இது அப்போஸ்தலனின் மற்றுமோர் கனிவான கூற்றாகும் (வசனம் 7). இக்கூற்று, "பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்து (ஒழுங்குபடுத்து)" என்னும் வசனத்துடன் மிகவும் சம்பந்தப்பட்டவை (நீதிமொழிகள் 22:6; மத்தேயு 28:19,20; எபிரெயர் 2:5-11).

ஊ. வசனம் 11. "உங்களை அழைத்த தேவனுக்கு நீங்கள் பாத்திரராய் நடக்க வேண்டும்". அப்போஸ்தலர் இரட்சிக்கப் பட்டவர்களுக்குள்ளே பரிசுத்தமும், நீதியும், பிழையின்மையுமாய் ஜீவித்தது மட்டுமின்றி, அவர்களும் தங்களுடைய நடக்கையைப் பின்பற்றும்படி வலியுறுத்தினார்களே! மேலும், அவர்கள் அவர்களுக்கு.

1. புத்தி சொன்னார்கள் - (வசனத்தைப் பிரசங்கித்து, போதித்ததின் மூலம்) பரிசுத்தமும் நீதியும் உள்ள வாழ்வுக்கென்று அவர்களை அழைத்தனர்.

2. தேறுதல் சொன்னார்கள் - ஒவ்வொருவர் பேரிலும் தனிக்கவனம் செலுத்தி, அவர்களுடைய ஆவிக்குரிய தேவைகளைச் சந்தித்தனர்.

3. எச்சரிப்புச் செய்தார்கள் - (வசனத்தைப் பிரசங்கித்து, போதித்ததின் மூலம்) கிறிஸ்துவோடு கூட ஆரம்பித்திருந்த அவர்களுடைய புதிய வாழ்க்கைக்குப் பாத்திரவான்களாக நடந்து கொள்ளும்படிக்கு நினைப்பூட்டினார்கள். (எபேசியர் 4:1)

ஊ. ஆதிச் சபையிலிருந்த அப்போஸ்தலர்களின் அதே நடக்கையை மீண்டும் கடைப்பிடிக்க வேண்டியது சபைத் தலைவர்களின் தேவையாயிருக்கிறது. அமெரிக்க நாட்டிலுள்ள சபைகளின் இன்றைய தேவையும் இதுவே!. இது எளிமையானதும், அடிப்படையானதும், அத்யாவசியமானது மாகும். இதைவிட செய்யத் தக்கது வேறொன்றுமில்லை. (அப்போஸ்தலர் 20:28-31; 1பேதுரு 5:1-3; 2தீமோத்தேயு 3:16).

3. அப்போஸ்தலர் தேவவசனத்தின் ஊழியஞ் செய்கின்றனர். (2:13-16).

அ. வசனம் 13. "தேவ வசனம்" என்பது கிறிஸ்துவின் சுவிசேஷமும், தேவனுடை "நற்செய்தியும்" ஆகும்.

ஆ. வசனம் 13. "விசுவாசிக்கிற உங்களுக்குள்ளே அது பெலன் செய்கிறது" வார்த்தை (சுவிசேஷச் செய்தி). தேவனிடமிருந்து துவங்கியபடியால், அது வல்லமையுள்ளது. (எபிரெயர் 4:12).

தெசலோனிக்கேயில் அப்போஸ்தலர்களின் ஊழியம் (1தெசலோனிக்கேயர் 2:1-16)

இது இயங்கக் கூடியது. வசனத்தைக் கேட்கும்பொழுது, கேட்பவர்களின் வாழ்க்கையில் செயல்பட ஆரம்பிக்கிறது. பவுல் ரோமாபுரியாருக்கு இவ்விதம் எழுதுகிறார்: "விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது (சுவிசேஷம்) தேவபெலனாயிருக்கிறது" (ரோமர் 1:16; 10:12-115; மேலும் காண்க யாக்கோபு 1:21; 1பேதுரு 1:23).

இ. வசனம் 13. நீங்கள் எங்களாலே கேள்விப்பட்டதை தேவவசனமாகவே ஏற்றுக்கொண்டீர்கள். தெசலோனிக்கேயில் உள்ள விசுவாசிகள் சுவிசேஷச் செய்தியை "தேவ வசனமாகவே" ஏற்றுக்கொண்டார்கள். பவுலும், அவரோடிருந்தவர்களும், பாவம், நீதி, நியாயத்தீர்ப்பு ஆகியவை பற்றி கண்டித்து உணர்த்தியது அவர்களுடைய சொந்த வல்லமையினால் அல்ல என்பதை அவர்கள் நன்கறிந்திருந்தார்கள். (யோவான் 16:8). அவர்கள் பேசிய வசனமே வல்லமை உள்ளதாயிருந்தது. இவ்வார்த்தை தேவனிடமிருந்தே தோன்றியது, இந்த அடிப்படை சத்தியம் மீண்டும் மீண்டும் சபையில் நினைப்பூட்டப்பட வேண்டியது அத்யாவசியமாயிருக்கிறது.

ஈ. வசனம் 14. "யூதேயா தேசத்தில் கிறிஸ்து இயேசுவுக்குள்ளான தேவனுடைய சபைகளை நீங்கள் பின்பற்றினவர்களாகி", பவுல் தன்னுடைய இரண்டாம் நிருபத்தில், "அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்" (2தீமோத்தேயு 3:12, மேலும் காண்க யோவான் 11:20). என தீமோத்தேயுவுக்கு எழுதுகிறார்.

தெசலோனிக்கேயில் புதிதாகக் குணப்பட்டவர்களுக்கு இதே காரியத்தைக் கூறியிருப்பார் என நான் நிச்சயித்திருக்கிறேன்! அங்கு சம்பவித்ததும் இதே காரியமேயாகும்!.

உ. தெசலோனிக்கேயில் புதிதாகக் குணப்பட்டவர்களுக்கு அதே பட்டணத்தில் வாழ்ந்த யூதரால் உபத்திரவம் உண்டாயிற்று, யூதேயாவிலுள்ள சபை விசுவாசிகளும், அவர்களுடைய பட்டணங்களிலுள்ள யூதர்களால் பாடுபட்டார்கள். ஆகேவேதான், யூதேயா தேசத்திலுள்ள சபைகளை நீங்கள் பின்பற்றினவர்களானீர்கள் எனப் பவுல் கூறுகிறார். இவ்வார்த்தைகள் இந்நாட்களில் நமக்கும் உரியதே என்பதை நாம் மறக்கக் கூடாது. பொல்லாப்பும், சீர்கேடும் நிறைந்த சந்ததியின் மத்தியில் தேவபக்தியாய் வாழும்படி வாஞ்சிக்கும் நாம் ஒவ்வொருவரும் துன்பப்படுத்தப்படுவது நிச்சயமே!.

ஊ. வசனம் 16. "எக்காலத்திலும் தங்கள் பாவங்களை நிறைவாக்குகிறார்கள்" யூதர்கள்.

1. இயேசுவைத் துன்பப்படுத்தி, கொலை செய்தார்கள் (அப்போஸ்தலர் 2:36).

2. தீர்க்கதரிசிகளைத் துன்பப்படுத்தி, கொலை செய்தார்கள் (அப்போஸ்தலர் 7:52).

3. பவுலையும், அவரோடிருந்தவர்களையும் தெசலோனிக் கேயிலும் (அப்போஸ்தலர் 17:5,8,10). அவர்கள் சுவிசேஷத்தைப் பிரசங்கித்த ஒவ்வொரு பெரிய பட்டணத்திலும் அவர்களை துன்பப்படுத்தி, எதிர்த்தனர்.

4. அவர்களுடைய ஒவ்வொரு தலைமுறையும் இன்னமும் தொடர்ந்து கிறிஸ்துவைப் புறக்கணித்து, சுவிசேஷத்தை எதிர்த்து வருகின்றனர். தேவனுக்கும், கிறிஸ்துவுக்கும் விரோதமாக ஒரு பாவத்தின் மேல் மற்றொரு பாவத்தைக் குவிக்கின்றனர்.

தெசலோனிக்கேயில் அப்போஸ்தலர்களின் ஊழியம் (1தெசலோனிக்கேயர் 2:1-16)

அவர்கள் தேவனுடைய பொறுமையின் எல்லையையே வந்து எட்டி விட்டனர். தங்கள் பிதாக்களின் அக்கிரம அளவை நிரப்புகின்றனர். (மத்தேயு 25:2).

எ. வசனம் 16. அவர்கள் மேல் கோபாக்கினை பூரணமாய் வந்திருக்கிறது". அவர்களுடைய நியாயத்தீர்ப்பு நிச்சயமானது. அவர்கள் மேல் தேவகோபாக்கினை விழுவது தப்பமுடியாதது. இதைத் தவிர்ப்பதற்கான சாத்தியக்கூறு ஏதுமில்லை. இன்னமும் தொடர்ந்து கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் புறக்கணித்து, சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டவர்களைத் துன்புறுத்தி, கொலை செய்யும் எவருக்கும் இது ஓர் எச்சரிப்பாகும்!

ஏ. "தேவகோபாக்கினை". யூதர்களின் மீது தமது கோபாக்கினையை வெளிப்படுத்தும் பொழுது, தேவன் அவர்கள் மேல் உக்கிரமாயிருப்பதாக. தமது கடுங்கோபத்தினால் அவர்களைத் தண்டித்து, அவர்களிடத்தில் பழிவாங்குவார். பவுல் இங்கு குறிப்பிடுவது கடைசி காலத்தைப் பற்றியதாகும். கீழ்க்கண்டவையும் உள்ளடங்கும்.

1. மரித்த துன்மார்க்கரின் தற்போதைய வேதனைமிக்க பாதாளம் **(Hades)** (லூக்கா 16:23-25,28).

2. வெளிப்படுத்தின விசேஷத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள ஏழு வருட மகா உபத்திரவம்.

3. "வெள்ளைச் சிங்காசன நியாயத்தீர்ப்புக்கு" பிறகு (வெளிப்படுத்தின விசேஷம் 20:11-15). நித்திய நரக அக்கினியில் (அக்கினிக் கடல்) பங்கடைதல்.

தேவகோபாக்கினைக்குத் தப்பும்படி தேவகுமாரனாகிய கிறிஸ்துவில் உண்மையாய் நிலைத்திருக்க, தேவன்தாமே உதவி செய்வாராக!.

முடிவுரை

அ. பவுலின் மூலம் பரிசுத்த ஆவியானவர் அருளிய இப்போதனை ஆதிச் சபைக்குத் தேவையாக இருந்ததைப் போல, இன்றைய சபைக்கும் ஏற்புடையதாகும். அப்போஸ்தலர் (மிஷினரிமார்) மாத்திரமின்றி, சபைத்தலைவர்கள் எல்லாரும் இப்போதனையைக் கேட்டு, அதனை நடைமுறைப்படுத்த வேண்டும்.

ஆ. கிறிஸ்துவின் உண்மை அப்போஸ்தலர்கள்.

1. பரிசுத்தமான இருதயத்தோடு,

2. பெற்றோர் பிள்ளைகளுக்குச் செய்வதைப் போன்று ஊழியஞ் செய்து,

3. தேவவசனத்தைப் போதிக்கின்றனர்.

இ. நாம் தேவன் அண்டையில் கிட்டிச் சேருவோம். இந்தப் போதனைக்கு ஏற்ப பரிசுத்த ஆவியானவர் நம் இருதயங்களை ஆராய்வாராக. நம் ஊழியத்தில் சீர்ப்படுத்த வேண்டியவைகளைப் பற்றி அவர் பேசும் பொழுது, அவர் நம்மைச் செய்யும்படிச் சொல்வதை நிறைவேற்ற உறுதிகொள்வோம்.

தேவனைப் பிரியப்படுத்தி ஜீவித்தல் (1தெசலோனிக்கேயர் 4:1-12)

முன்னுரை

அ. தெசலோனிக்கேயில் உள்ள விசுவாசிகள் தேவனுக்குப் பிரியமாயிருக்கும்படி, இன்னின்ன பிரகாரமாய் நடக்கவேண்டுமென்று பவுல் ஏற்கெனவே அவர்களுக்குப் போதித்திருந்தார். அவர்களுடைய ஆவிக்குரிய அணிவகுப்புக்கான ஆணை முன்னதாகவே பிறப்பிக்கப்பட்டுவிட்டது.

ஆ. இருப்பினும் மூன்று முக்கியமான விஷயங்களை அவர்களுக்கு நினைவுபடுத்துவது அவசியமென அவர் உணர்ந்தார்.

1. மாம்ச இச்சையைக் கட்டுப்படுத்த வேண்டும்.

2. ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டும்.

3. தங்கள் சொந்த அலுவல்களைப் பார்க்கவும், தங்கள் சொந்தக் கைகளினாலே வேலை செய்யவும் வேண்டும்.

1. நம்முடைய மாம்ச இச்சைகளைக் கட்டுப்படுத்தும் பொழுது, நாம் தேவனைப் பிரியப்படுத்தி ஜீவிக்கிறோம் (4:3-8).

அ. வசனம் 3 "நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது" "பரிசுத்தமாக்கப்படுதல்" என்பதின் அர்த்தம், முற்றிலுமாகத் தேவனுக்கென்று பிரதிஷ்டை செய்தல்; சுத்தமான, தூயஜீவியம் செய்தல் என்பதாகும். இருப்பினும், 'பரிசுத்தமாக்கப்படுதல்' என்பதின் தனது விளக்கத்தைப் பவுல் கீழே கண்டுள்ள வசனங்களில் சுருங்கக் கூறி விளங்கப்பண்ணுகிறார்.

1. மோக இச்சைக்கு உட்படாதிருங்கள் - வேசி மார்க்கத்துக்கு விலகி இருங்கள் (வசனம் 3,4).

2. உங்களுடைய சரீரத்தைக் கட்டுப்படுத்தக் கற்றுக்கொள்ளுங்கள் - உங்கள் மனைவிக்குச் செய்ய வேண்டிய கடமையைச் செய்து, அவளுடன் வாழுங்கள் (1கொரிந்தியர் 7:2,3).

3. மாம்ச இச்சைக்கடுத்த விஷயத்தில் ஒருவனும், கிறிஸ்துவுக்குள்ளான தன் சகோதர சகோதரிகளை வஞ்சிக்கக் கூடாது (வசனம் 3-6).

ஆ. பவுலின் இந்த எச்சரிப்பு ஆதித்திருச்சபையின் காலத்தைப் போன்று, இந்நாட்களுக்கும் ஏற்புடையதாகும். சபையில் மோக இச்சை என்பது விசுவாசிகளுக்கு மாத்திரமின்றி, போதகர், சுவிசேஷகர், இதர சபைத்தலைவர் ஆகியோருக்கும் தொடர்ந்து பெரும் பிரச்சினையாக உள்ளது.

இ. வசனம்6 "இப்படிப்பட்ட விஷயங்களெல்லாவற்றையும் குறித்துக் கர்த்தர் நீதியைச் சரிக்கட்டுகிறவராயிருக்கிறார்". "நீதியைச் சரிக்கட்டுதல்" என்பதின் அர்த்தம் இரக்கமின்றி தண்டித்தல், பழிவாங்குதல் என்பவையாகும் (ரோமர் 12:19). மனுக்குலமானது உலகத்தின் காரியங்களிலும், வழிகளிலும் தொடர்ந்து பேராவல் கொண்டுள்ளது (யாக்கோபு 4:5). மேற்கண்ட எச்சரிப்பு மோக இச்சைகளிலிருந்து தடுத்தாட்கொள்வதாக அமைய வேண்டும். நாம் இயேசுவில் விசுவாசம் வைக்கும்பொழுது, பாவசுபாவம் பெலனற்றதாகிறது. ஆனால் இது மரிப்பதில்லை! கற்புநெறி கெட்டதும், சீர்கெட்டதுமான சமுதாயத்தில் வாழும் நாம் மிகவும் விழிப்புள்ளவர்களாக ஜீவிக்க வேண்டியது அவசியம்.

தேவனைப் பிரியப்படுத்தி ஜீவித்தல் (1தெசலோனிக்கேயர் 4:1-12)

ஈ. வசனம் 7. "தேவன் நம்மை அசுத்தத்திற்கல்ல, பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார்" இதனை வலியுறுத்தும் பேதுரு இவ்விதம் கூறுகிறார். "உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறது போல, நீங்களும் உங்கள் நடக்கை களெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள் நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று எழுதியிருக்கிறதே" (1பேதுரு 1:15,16, லேவியராகமம் 11:44).

உ. வசனம் 8. "ஆகையால் (கட்டளைகளை) அசட்டை பண்ணுகிறவன், மனுஷரை அல்ல, தமது பரிசுத்த ஆவியை நமக்குத் தந்தருளின தேவனையே அசட்டை பண்ணுகிறான்" மோக இச்சைகளை நிறைவேற்றும்பொழுது:

1. அவர் பரிசுத்தமுள்ளவராயிருப்பது போல, உன்னையும் பரிசுத்தவானாக்கும்படி உனக்குள் வாசம்பண்ணி, வழிநடத்தி, ஆலோசனை அளித்து, போதித்து வரும் பரிசுத்த ஆவியானவரை அசட்டை பண்ணுகிறாய்.

2. நீதியைச் சரிக்கட்டுவதில் தேவனை ஒரு பொருட்டாக எண்ணாமல் அவமதிக்கிறாய்.

ஊ. ஆதலால், மனந்திரும்பாத மோக இச்சைகளுக்குப் பின் விளைவுகள் உண்டு:

1. அப்படிப்பட்டவனிடமிருந்து பரிசுத்த ஆவியானவர் விலகி விடுவார் (சங்கீதம் 51:11, ஏசாயா 63:10; எபேசியர் 4:30).

2. அப்படிப்பட்டவனை அவனுடைய துன்மார்க்க வழிகளுக்குத் தேவன் ஒப்புக்கொடுத்து விடுவார். (ரோமர் 1:24,26,28).

எ. தேவனையும், தனக்குள் வாசஞ்செய்யும் பரிசுத்த ஆவியானவரையும் பிரியப்படுத்தும்படி உண்மையாக விரும்பும் விசுவாசி மாம்ச இச்சைகளைக் கட்டுப்படுத்தி வாழ்வதுடன், கீழ்கண்டுள்ள பாவங்களுக்கும் விலகி ஜீவிப்பார்:

1. திருமணமானவர் தன் மனைவியல்லாத பெண்ணுடனும், அல்லது திருமணமானவள் தன் புருஷன் அல்லாதவருடனும் கொள்ளும் தவறான பாலுறவுகள்.

2. திருமணமாகாத ஆண்களுக்கும், பெண்களுக்கும் இடையே உள்ள தவறான பாலுறவுகள்.

3. திருமணமானவர்கள், திருமணமாகாத ஆண்கள், பெண்களுடன் கொள்ளும் தவறான பாலுறவுகள்.

4. விபசாரத்தில் ஈடுபடுத்துதல் - பணத்திற்காகக் கொள்ளும் பாலுறவுகள்.

5. ஓரினப் பாலுறவு - ஒரே இனத்தைச் சேர்ந்தவருடன் கொள்ளும் பாலுறவுகள்

6. தகாத உறவு - தடைவிதிக்கப்பட்ட நெருங்கிய உறவினருடன் கலவும் பாலுறவுகள்

2. ஒருவரிலொருவர் அன்பாயிருக்கும் பொழுது நாம் தேவனைப் பிரியப்படுத்தி ஜீவிக்கிறோம் (4:9,10).

அ. வசனம் 9 "சகோதர சிநேகத்தைக் குறித்து நான் உங்களுக்கு எழுதவேண்டுவதில்லை" "சகோதர சிநேகம்" என்பது ஒரே தகப்பனுக்குப் பிறந்த பிள்ளைகளின் பரஸ்பர சிநேகத்தைக் குறிக்கும் பதமாகும். நம் எல்லோருக்கும் ஒரே பரலோகப் பிதா இருப்பதால், விசுவாசிகள் "ஒருவருக்கொருவர் கொண்டுள்ள அன்பு" என்பது புதிய ஏற்பாட்டின் அர்த்தமாகும். "சகோதர சிநேகத்திலே ஒருவர் மேலொருவர் பட்சமாயிருங்கள்" என பவுல் ரோமாபுரியாருக்கு எழுதுகிறார் (ரோமர் 12:10).

தேவனைப் பிரியப்படுத்தி ஜீவித்தல் (1தெசலோனிக்கேயர் 4:1-12)

ஆ. வசனம் 9. "நீங்கள் தேவனால் போதிக்கப்பட்டவர் களாயிருக்கிறீர்கள்." பவுல், நாங்கள் பரிசுத்த ஆவி போதிக்கிற வார்த்தைகளாலே" பேசுகிறோம் எனக் கொரிந்தியருக்கு எழுதுகிறார் (1கொரிந்தியர் 2:13). இந்த பொருள்படவே அவர் இங்கு கூறுகிறார். நாம் அபிஷேகத்தைப் பெற்றுக்கொண்ட போது நமக்குள் வந்து வாசம் பண்ணும் பரிசுத்த ஆவியானவர், (ரோமர் 8:9; 12:13) நம்முடைய ஆலோசகராகவும், போதகராகவும், வழிகாட்டியாகவும் இருக்கிறார் (யோவான் 14:26; மேலும் காண்க ஏசாயா 54:13; யோவான் 6:45). அவர் நமது கரத்தைப் பிடித்து, நம்மை "நீதியின் பாதைகளில்" (சரியான ஜீவியத்தில்) நடத்த ஆரம்பிக்கிறார் (சங்கீதம் 23:3).

இ. ஒரு சந்தர்ப்பத்தில் இயேசுவானவர், "நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்தது போல நீங்களும் ஒருவரிலொவர் அன்பாயிருங்கள்" (யோவான் 13:34). என்ற புதிதான கட்டளையைத் தமது சீஷர்களுக்குக் கொடுத்தார். வெகுமதிகள் கொடுத்தல், அன்பின் கிரியைகளைச் செய்தல், தனிப்பட்ட அக்கறை காண்பித்தல் ஆகியவற்றின் மூலம் கிறிஸ்துவுக்குள்ளான நமது சகோதர சகோதரிகளுக்கு நம்முடைய அன்பை வெளிப்படுத்தலாம். இந்த அர்த்தத்தில்தான் யாக்கோபும்,"அப்படியே விசுவாசமும் கிரியைகளில்லாதிருந்தால் தன்னிலேதானே செத்ததாயிருக்கும்" (யாக்கோபு 2:17) எனக் கூறுகிறார். பரிசுத்த ஆவியானவரால் போதித்து நடத்தப்படுகிறவர்கள், தாங்களாகவே ஒருவருக்கொருவர் இவ்விதம் கிரியைகளைச் செய்வார்கள்!

ஈ. வசனம் 10. "அந்தப்படி நீங்கள் மக்கெதோனியா நாடெங்குமுள்ள சகோதரரெல்லாருக்கும் செய்து வருகிறீர்கள்" தெசலோனிக்கேயிலுள்ள விசுவாசிகள் ஒருவருக்கொருவர் சகோதர சிநேகத்தை வெளிப்படுத்தியது மாத்திரமின்றி, தங்களது சொந்தச் சபையின் எல்லையையும் தாண்டி, மக்கெதோனியாவிலுள்ள இதர சபைகளிலுள்ள விசுவாசி களுக்கும் தங்களுடைய சகோதர சிநேகத்தை வெளிக் காட்டினார்கள்! இது அவர்களுடைய வாழ்க்கைக்கோர் மாதிரியாக அமைந்திருந்தது. "வீட்டு ஊழியங்கள்" என்பது சபைக்குப் புதியதல்ல, ஆதியிலிருந்தே தெசலோனிக்கேயிலுள்ள விசுவாசிகள் இதனை செயற்படுத்தியிருந்தார்கள்!.

உ. வசனம் 10 "சகோதரரே, அன்பிலே நீங்கள் இன்னும் அதிகமாய்ப் பெருகவும்", வெகுமதிகள் கொடுத்தல், அன்பின் கிரியைகளைச் செய்தல், ஒருவருக்கொருவர் தனிப்பட்ட அக்கறை காண்பித்தல் போன்றவற்றில் கிறிஸ்தவர்கள் ஒருபோதும் சலிப்படையக் கூடாது. ஒருவரிலொருவர் அன்பாயிருப்பது, ஒருவர் கிறிஸ்துவின் சீஷன் என்பதற்கான ஒப்பற்ற அடையாளங்களில் ஒன்றாகும் (யோவான் 13:35). ஒருவரிடத்திலொருவர் அன்பு கூருகிற கடனேயல்லாமல், மற்றொன்றிலும் ஒருவனுக்கும் கடன்படாதிருங்கள் என்று பவுல் நமக்கு அறிவுறுத்துகிறார் (ரோமர் 13:8). ஒருபோதும் திருப்பிச் செலுத்த முடியாத தொடர் கடனைப் போல சகோதர சிநேகம் இருக்க வேண்டுமென்பது இதன் விளக்கமாகும்.

3. நம்முடைய சொந்தக் கைகளினால் வேலை செய்து, சொந்த அலுவல்களைக் கவனிக்கும் பொழுது, நாம் தேவனைப் பிரியப்படுத்தி ஜீவிக்கிறோம் (4:11,12).

அ. வசனம் 11,12- "புறம்பேயிருக்கிறவர்களைப் பற்றி யோக்கியமாய் நடந்து, ஒன்றிலும் உங்களுக்குக் குறைவில்லாதிருக்கும்படிக்கு"

தேவனைப் பிரியப்படுத்தி ஜீவித்தல் (1தெசலோனிக்கேயர் 4:1-12)

நாங்கள் உங்களுக்குக் கட்டளையிட்டபடியே நடவுங்கள் என்று கூறி பவுல் தெசலோனிக்கேயரை உற்சாகப்படுத்துகிறார். இது உங்களுடைய குறிக்கோளாகவும் இருக்கட்டும்:

1. அமைதலுள்ளவர்களாயிருக்கும்படி நாடுங்கள்:- குழப்பம் ஏதும் உண்டாக்காமல், அமைதியான வாழ்க்கை நடத்துங்கள், உங்களுக்குள்ளே இளைப்பாறுதலும், சமாதானமும் உள்ளவர்களாக இருங்கள்.

2. உங்கள் சொந்த அலுவல்களைப் பாருங்கள்:- மற்றவர்களின் வாழ்க்கையிலும், சபையின் அன்றாட அலுவல்களிலும், சபைத் தலைவர்களின் விஷயத்திலும் அநாவசியமாகக் குறுக்கிடாமல், உங்களுடைய சொந்த வாழ்க்கையைப் பற்றி கவனமாயிருங்கள்.

3. உங்கள் சொந்த கைகளினால் வேலை செய்யுங்கள்: உங்களுடைய சொந்த ஜீவனத்துக்காகச் சம்பாதியுங்கள்.

ஆ. பவுல் இந்த விஷயங்களை வலியுறுத்துவதற்கு இரண்டு காரணங்களுண்டு:

1. உங்களுடைய அன்றாட வாழ்க்கை புறம்பே இருக்கிறவர்களின் நன்மதிப்பைப் பெறும் - அவர்களைக் கிறிஸ்துவினிடம் ஆதாயப்படுத்துவதற்கும், உங்களுடைய சபைக்கு அவர்கள் வருகை தருவதற்கும் இது அடிப்படையாக அமையும்.

2. நீங்கள் எவரையும் சார்ந்திருக்க வேண்டியதில்லைமற்றவர்களிடமிருந்து வாங்குவதின்மூலம்இதர விசுவாசிகளை, குறிப்பாக, குடும்பத்தினரைக் கஷ்டப்படுத்த வேண்டியதில்லை.

இ. தீமோத்தேயுவுக்கு எழுதின தனது முதலாம் நிருபத்தில் பவுல் இவ்விதம் எழுதுகிறார்: "ஒருவன் தன் சொந்த ஜனங்களையும், விசேஷமாகத் தன் வீட்டாரையும் விசாரியாமற் போனால், அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும், அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருப்பான்". (1தீமோத்தேயு 5:8).

ஈ. தன்னுடைய இரண்டாம் நிருபத்தில் தெசலோனிக் கேயிலுள்ள விசுவாசிகளுக்கு இதே விஷயத்தை எழுதுவது அவசியமெனப் பவுல் உணர்ந்தார் (2 தெசலோனிக்கேயர் 3:6-15). தெசலோனிக்கேயிலுள்ள சிலருக்கு இது பிரச்சினையாக இருந்திருக்கக் கூடும். ஆதலால், பவுல் நேரிடையாக இவ்விதம் சாடுகிறார்:

1. "ஒருவன் வேலை செய்ய மனதில்லாதிருந்தால் அவன் சாப்பிடவுங் கூடாது" (3:10)

2. "உங்களில் சிலர் யாதொரு வேலையும் செய்யாமல், வீண் அலுவற்காரராய் ஒழுங்கற்றுத் திரிகிறார்களென்று கேள்விப்படுகிறோம். அவனுடனே கலவாதிருங்கள்" (3:6,14).

உ. வேலை செய்ய மனதற்ற விசுவாசிகள் வீடு வீடாக அலையும்படி சோதிக்கப்பட்டு, சகோதரர் மத்தியில் பூசலையும், சச்சரவையும் பிளவையும் விளைவிக்கின்றனர். அவர்கள் வம்பு பேசி, வதந்திகளைப் பரப்புகிறவர்களாயிருக்கின்றனர். இவர்கள் இதர விசுவாசிகளுக்குப் பாரமாக மாறுவதுடன், தனக்கு பண உதவி செய்கிறவர்களுக்குக் கொடுக்கும் வாக்குறுதிகளையும் நிறைவேற்றக் கூடாமல் உள்ளனர்.

ஊ. இருப்பினும், கிறிஸ்தவன் ஒருவன் வேலை செய்யாமலிருப்பதற்கு, அங்கவீனம், முதுமை, உடல்நலிவு, புத்திசுவாதீனம் போன்ற நியாயமான காரணங்களும் இருக்கின்றன.

தேவனைப் பிரியப்படுத்தி ஜீவித்தல் (1தெசலோனிக்கேயர் 4:1-12)

அதே வேளையில், "தமது சபைக்காகக் கிறிஸ்து அதிசீக்கிரம் வருகிறார்" என்பதற்காக விசுவாசிகள் சோம்பலுடன் வேலையை விட்டு விடுவது நியாயமான காரணமல்ல என்பதை பவுல் ஏற்றுக் கொள்வார் என்பதை நான் நிச்சயித்திருக்கிறேன்.

முடிவுரை

அ. தேவனைப் பிரியப்படுத்தி ஜீவிக்கும் விசுவாசிகள் இவ்விதம் செய்வார்கள்:

1. பாலுறவு செயலையும், விருப்பத்தையும் தங்களுடைய துணைவன், துணைவியுடன் மட்டும் நிறுத்திக் கொள்வார்கள்.

2. ஈதல், அன்பின் கிரியைகள், பிறரின் நலனில் தனி அக்கறை காட்டுதல் மூலம் சகவிசுவாசிகளுக்குத் தங்கள் அன்பைக் காண்பிப்பார்கள்.

3. சொந்த ஜீவனத்துக்காக சம்பாதித்து, சொந்த அலுவல்களைக் கவனிப்பார்கள்.

ஆ. இன்றைக்கும், தன் துணையை விட்டுப் புறம்போயிருக் கிறவர்களுடன் பாலுறவு கொள்ளுகிறவர்களும், மற்ற விசுவாசிகளுக்கு சகோதர சிநேகத்தை வெளிப்படுத்தாத வர்களும், தங்களுடைய சொந்த ஜீவனத்துக்காக சம்பாதியாமல் சும்மா இருப்பவர்களும், "மனந்திரும்பி சத்தியத்துக்குக் கீழ்ப்படியும்படி" நாங்கள் எச்சரிக்கிறோம்.

இ.நீங்கள்மனந்திரும்பிகீழ்ப்படிவீர்களானால் கீழ்க்கண்டுள்ள விளைவுகள் உண்டாகும்:

1. மற்றவர்களைக் கிறிஸ்துவினிடத்திற்கும், இந்த சபைக்கும் உங்களால் வழிநடத்த முடியும்.

2. சாபத்திற்குப் பதிலாக நீங்கள் ஆசீர்வாதமாக மாறுவீர்கள்.

3. நித்திய ஜீவனாகிய பந்தயப் பொருளை ஆதாயப் படுத்திக் கொள்வீர்கள்.

தமது சபைக்காக மத்திய ஆகாயத்தில் கர்த்தர் வரும் நாள் (சபை எடுத்துக் கொள்ளப்படுதல்) (1தெசலோனிக்கேயர் 4:13-18)

முன்னுரை

தெசலோனிக்கேயில் சபையை நிறுவிய அப்போஸ்தலர் குழுவினருக்கு சபை எடுத்துக் கொள்ளப்படுவதைப் பற்றிய முழு சத்தியத்தையும் விளங்கப் பண்ணுவது அசாத்தியமாக இருந்திருக்கலாம். மிகவும் தீவிரமாகப் பட்டணத்தை விட்டுப் பலாத்காரமாக வெளியேற்றப்பட்டப் பவுலோடு கூட பெரும் இடர்களின் மத்தியில் அவர்கள் ஊழியஞ் செய்தார்கள். (அப்போஸ்தலர் 17:5-10). இதினிமித்தமாக, தெலோனிக் கேயாவுக்குத் திரும்பும்படி பவுல் மீண்டும் மீண்டும் பிரயத்தனம் பண்ணினார். அவர் அத்தேனேயில் இருந்தபொழுது, இனி தான் செல்வது அசாத்தியமெனக் கண்டு தீமோத்தேயுவை தெசலோனிக்கேயாவுக்கு அனுப்பினார். (1தெசலோனிக்கேயர் 2:17-3:1).

ஆ. தீமோத்தேயுவின் அப்போஸ்தல ஊழிய சந்திப்பு வெற்றிகரமாக அமைந்த போதிலும், தெசலோனிக்கேயருக்கு இரண்டு நிருபங்களைப் பவுல் எழுதும் வரைக்கும், சபை எடுத்துக் கொள்ளப்படுவதைப் பற்றிய போதனையை அவர்கள் பெற்றுக் கொள்ளவேயில்லை. முதல் தெசலோனிக்கேயரின் ஒவ்வொரு அதிகாரமும் சபை எடுத்துக் கொள்ளப்படும் குறிப்புடனே முடிவுறுகிறது. பெரும்பாலும் 4-ஆம் அதிகாரம் முழுவதும் இந்த சத்தியத்தையே வலியுறுத்துகிறது. (1:9,10; 2:19,20; 3:13; 4:13-18; 5:23,24). இரண்டாம் தெசலோனிக்கேயரின் 47 வசனங்களில் 17 வசனங்கள் இந்தப் போதனையையே விளக்குகிறது.

1. தமது சபைக்காகக் கிறிஸ்து மத்திய ஆகாயத்தில் வரும்பொழுது, நித்திரையடைந்திருந்த விசுவாசிகளின் ஆவிகளும் அவரோடு கூட வரும் (4:13,14)

அ. வசனம் 13. "நித்திரையடைந்தவர்களினிமித்தம்". "நித்திரையடைந்தவர்கள்" என்பதின் அர்த்தம் மரித்தவர்கள் என்பதாகும் (யோவான் 11:11; 1கொரிந்தியர் 7:9; 15:18; 2பேதுரு 3:4). இந்தக் குறிப்புகள் ஏற்கெனவே கர்த்தருக்குள் மரித்த விசுவாசிகளைப் பற்றியதாகும். தெசலோனிக்கேயிலுள்ள விசுவாசிகளில் சிலர் பவுலின் போதனைகளைத் தவறாக விளங்கிக் கொண்டு, தமது சபைக்காக கிறிஸ்து திரும்பி வரும் வரைக்கும் விசுவாசிகள் அனைவரும் உயிரோடிருப்பார்கள் என எண்ணியிருந்திருக்கக் கூடும். ஆதலால், விசுவாசிகளில் சிலர் மரித்த பொழுது, அவர்கள் இவ்விதம் கேள்வி கேட்க ஆரம்பித்தார்கள்: "மரித்தவர்கள் எல்லாரும் உண்மையில் இரட்சிக்கப்பட்டிருந்தார்களா? அவர்கள் கிருபையினின்று விழுந்து விட்டார்களா? நாம் எல்லாரும் உயிர்த்தெழுதலில் இடம் பெறவில்லையா? கிறிஸ்துவை விசுவாசிப்பவர்களுக்கு உண்மையிலேயே மரித்தோரின் உயிர்த்தெழுதல் உண்டா?

ஆ. வசனம் 13. "நம்பிக்கையற்றவர்களான மற்றவர்களைப் போலத் துக்கித்து, அறிவில்லாதிருக்க எனக்கு மனதில்லை". "துக்கித்தல்", "நம்பிக்கையற்றிருத்தல்" என்பவற்றின் அர்த்தம் கவலைப்படுதல் தொடர்ந்து துக்கப்படுதல், வருந்துதல் என்பனவாகும். கிறிஸ்துவுக்குப் புறம்பே ஜீவிக்கிறவர்கள் எல்லோரும் தொடர்ந்து துக்கத்தில் ஆழ்ந்து விடுகின்றனர். ஏனெனில், அவர்கள் மரணத்திற்குப் பிறகு உள்ள ஜீவனைப் பற்றிய எவ்வித நம்பிக்கையும் அற்றவர்களாக உள்ளனர். அவர்களுக்கு மரணமே எல்லாவற்றின் முடிவுமாக இருக்கிறது. முதல் நூற்றாண்டிலும், இக்காலத்திலும் தேவனற்றவர்களாக வாழ்பவர்களுக்கு இதுவே உண்மையாக உள்ளது.

தமது சபைக்காக மத்திய ஆகாயத்தில் கர்த்தர் வரும் நாள் (சபை எடுத்துக் கொள்ளப்படுதல்) (1தெசலோனிக்கேயர் 4:13-18)

இதினிமித்தமாகவே கல்லறையின் மேலுள்ள வாசகங்களிலும், இலக்கியத்திலும் மரணத் திகில் பற்றிய குறிப்புகள் உள்ளன.

இ. கிறிஸ்துவை அறியாத அநேகரை நான் அடக்கம் பண்ணியிருக்கிறேன். அவர்கள் குடும்பத்தினர் வேதனை, மரணம் ஆகியவற்றின் அகோரத்தைப் பற்றி பேசியிருக்கிறார்கள். குறிப்பிட்ட நபர் தனது ஜீவிய காலத்தில் எதைச் செய்தார் அல்லது பேசினார் என்பதையும்; அவருடைய இன்ப, துன்ப நேரங்களில் அவர்கள் பகிர்ந்து கொண்டவற்றையும், அவர்களுடைய பிள்ளைகள் அல்லது குடும்ப அங்கத்தினர்களின் தற்போதைய சூழ்நிலையையும் எப்போதும் பின்னிட்டுப் பார்க்கின்றனர். ஆனால், மரணத்திற்குப் பிற்பாடுள்ள வாழ்வைப் பற்றி அவர்கள் ஒருபோதும் முன்னோக்கிப் பார்ப்பதேயில்லை. ஜீவனுள்ள நம்பிக்கையை அவர்கள் அறிந்திருக்கவில்லை. கிறிஸ்துவை அவர்கள் அறியாமலும், அவருடைய வருகையை எதிர்நோக்காமலும் ஜீவிக்கின்றனர்.

ஈ. வசனம் 14. "இயேசுவானவர் மரித்து பின்பு எழுந்திருந்தாரென்று விசுவாசிக்கிறோமே", " இயேசுவானவர் கல்வாரியில் பாடுபட்ட பொழுது, சரீரப்பிரகாரமாக மரித்தார் (மாற்கு 17:37,39,44,45). அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பு இயேசுவின் சரீரத்தைக் கேட்டுப் பெற்றுக்கொண்டு, மெல்லிய துப்பட்டியில் சுற்றி, கன்மலையில் வெட்டியிருந்த கல்லறையிலே அவரை வைத்தான் (மாற்கு 15:46). இவை அனைத்தையும் மகதலேனா மரியாளும், யோசே தாயாகிய மரியாளும் பார்த்தார்கள்". (மாற்கு 15:47).

உ. மரித்து, அடக்கம்பண்ணப்பட்ட கிறிஸ்து உயிரோடெழும்பினார். அதன் பின்பு, மகதேலனா மரியாள், யோசேயின் தாயாகிய மரியாள் (மத்தேயு 28:9), எம்மாவூருக்குச் சென்ற இரண்டு சீஷர்கள் (லூக்கா 24:15), பேதுரு, யாக்கோபு, பன்னிரெண்டு அப்போஸ்தலர், ஒரே வேளையில் ஐந்நூறுக்கு மேற்பட்டவர்கள் ஆகியோருக்கு அவர் தரிசனமானார். எல்லாருக்கும் பின்பு, அகாலப் பிறவி போன்ற எனக்கும் தரிசனமானார் என்று பவுல் கூறுகிறார் (1கொரிந்தியர் 15:3, 5-8). கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்தது போல, ஏற்கெனவே கிறிஸ்துவுக்குள் மரித்த விசுவாசிகளும் எழுந்திருப்பார்கள். நம்முடைய நம்பிக்கை இயேசுவில் மாத்திரமே உள்ளது. அவர் (மரணத்திற்குப் பிறகு) ஜீவிப்பதால், நாமும் (மரணத்திற்குப் பிறகு) ஜீவிப்போம். மரணத்திற்குப் பிறகு கிறிஸ்துவின் சரீரம் உயிர்த்தெழுந்தது, மரணத்திற்குப் பிறகு நம்முடைய சரீரங்களும் உயிர்த்தெழும் என்பதை உறுதிப்படுத்துகிறது (1கொரிந்தியர் 15:22,23).

ஊ. வசனம் 14. "அப்படியே இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்களையும் தேவன் அவரோடே கூடக் கொண்டு வருவார்". கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் (அவர்களின் ஆவிகள்) சரீரத்தை விட்டுக் குடிபெயர்ந்து, கர்த்தரிடத்தில் (பரலோகத்தில்) குடியிருக்கிறார்கள் (2 கொரிந்தியர் 5:6,8; பிலிப்பியர் 1:23,24). இவர்களே கிறிஸ்துவுக்குள் மரித்த "பரிசுத்தவான்கள்". இயேசுவானவர் தமது சபைக்காக மத்திய ஆகாயத்தில் வரும்பொழுது இவர்களும் இயேசுவோடு கூட வருவார்கள் (1 தெசலோனிக்கேயர் 3:13).

எ. நம் மத்தியில் மரிப்பவர்களின் ஆவிகள் கர்த்தரோடு கூட இருக்கும்படிச் செல்கிறது. தமது சபைக்காகக் கிறிஸ்து ஆகாயத்தில் வரும்பொழுது இவர்களும், பரிசுத்த தூதர்களும் அவரோடு கூட வருவார்கள். அவ்வேளையில் இவர்கள் தங்களுடைய உயிர்த்தெழுந்த சரீரத்துடன் இணைந்து விடுவார்கள்.

தமது சபைக்காக மத்திய ஆகாயத்தில் கர்த்தர் வரும் நாள் (சபை எடுத்துக் கொள்ளப்படுதல்) (1தெசலோனிக்கேயர் 4:13-18)

2. தமது சபைக்காகக் கிறிஸ்து ஆகாயத்தில் வரும்பொழுது, நித்திரையடைந்த பரிசுத்த வான்களின் சரீரங்கள் மறுரூபம் அடையும் (4:16).

அ. "கர்த்தர் தாமே... வானத்திலிருந்து இறங்கி வருவார்". தமது சபையை சேர்த்துக் கொள்ளும்படி இறங்கி வரும் உத்தரவாதத்தை வேறு யார் மீதும் சுமத்தாமல், இயேசுதாமே வருவார். எத்தகைய முக்கியத்துவம் வாய்ந்ததன்றோ இஃது! எத்தனை நீண்ட காலமாக அவர் காத்திருக்கிறார்! மனுக்குலத்தின் வரலாற்றில் ஒப்பற்றதோர் தெய்வீகக் குறுக்கீடு இது! தூதராலும், வேறெந்த சிருஷ்டியாலும் செய்யக் கூடாத மகத்தானப் பணி இதுவேயாம்!

ஆ. "கர்த்தர்தாமே ஆரவாரத்தோடும்" யோவான் சுவிசேஷத்தில் நமக்கு இயேசு இவ்விதம் கூறுகிறார்: "பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய (என்னுடைய) சத்தத்தைக் கேட்குங் காலம் வரும். அப்பொழுது, நன்மை செய்தவர்கள் (என்றென்றுமாய்) ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகப் புறப்படுவார்கள்." (யோவான் 5:28,29) இந்தச் சத்தம், வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும், வல்லமையும் உடையவரின் சத்தமேயாகும் (மத்தேயு 28:18). இச்சத்தம் பெருவெள்ளத்து இரைச்சலைப் போல அல்லது, பலத்த இடிமுழக்கம் போல இருக்கும் (வெளிப்படுத்தின விசேஷம் 1:15; 14:2), உலகத்தை உருவாக்கும்படி உரைக்கப்பட்ட சத்தமும் இதுவேயாகும் (ஆதியாகமம் 1:3,6,9,14,20,24).

பத்மு தீவில் யோவான் அப்போஸ்தலன் கேட்ட எக்காளம் போன்ற பெருஞ்சத்தமும் இதுவே (வெளிப்படுத்தின விசேஷம் 1:10).

இ. "பிரதான தூதனுடைய சத்தத்தோடும்". வேதத்தில் பெயர் சொல்லப்பட்ட ஒரே பிரதான தூதன் மிகாவேல் (யூதா 9; தானியேல் 10:13). கிறிஸ்துவின் சத்தத்துக்கு இணையாகச் சத்தத்தை உயர்த்தி, மரித்த பரிசுத்தவான்களின் சரீரங்கள் உயிர்த்தெழும்படி அழைப்பதற்குப் பிரதான தூதனுக்குச் சொல்லப்படும்.

ஈ. "தேவஎக்காளத்தோடு" வேதாகமத்தின் கொண்டாட்டங்கள், வெற்றிகள் ஆகியவற்றுடன் சம்பந்தப்பட்ட ஒன்று எக்காளம். யூபிலி வருடத்தையும் (லேவியராகமம் 25:9), எக்காளப் பண்டிகையையும் (லேவியராகமம் 23:24), அறிவிப்பதற்கு எக்காளம் பயன்படுத்தப்பட்டது. வனாந்தரத்தில் இஸ்ரவேலரைக் கூட்டிச் சேர்ப்பதற்கு எக்காளம் ஊதப்பட்டது (எண்ணாகமம் 10:1-8), தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் கூட்டிச் சேர்க்கப்படும் பொழுது "எக்காள சத்தம்" தொனிக்கும் என இயேசுவானவர் திட்டவட்டமாகக் குறிப்பிடுகிறார் (மத்தேயு 24:31). மேலும், கொரிந்தியருக்கு எழுதின தனது முதலாம் நிருபத்தில், விசுவாசிகளின் சரீர உயிர்த்தெழுதலோடு எக்காளம் தொனிப்பதை சம்பந்தப்படுத்தி பவுல் எழுதுகிறார் (1கொரிந்தியர் 15:52).

உ. "கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள்". "முதலாவது" என்பதின் அர்த்தம், கிறிஸ்து வெளிப்படும் போது உயிரோடிருக்கும் பரிசுத்தவான்கள் எடுத்துக் கொள்ளப்படுவதற்கு முன்னதாக, கிறிஸ்துவுக்குள் மரித்தவர்களின் சரீரங்கள் உயிரோடெழும்பும் என்பதாகும். மரித்தோர் உயிர்த்தெழும்படி அவர் கட்டளையிடும்பொழுது, கிறிஸ்துவில் மரித்தவர்களின் சரீரங்கள் மறுரூபமடைந்து வல்லமை, மகிமை, சாவாமை, அழியாமை உடையதாக மாறும். (1கொரிந்தியர் 15:42-44; 53,54).

தமது சபைக்காக மத்திய ஆகாயத்தில் கர்த்தர் வரும் நாள் (சபை எடுத்துக் கொள்ளப்படுதல்) (1தெசலோனிக்கேயர் 4:13-18)

ஊ. உயிர்த்தெழுந்த சரீரங்கள் அவர்களின் ஆவியோடு இணைந்து, கிறிஸ்துவை மத்திய ஆகாயத்தில் சந்திப்பார்கள். அப்பொழுது இந்த வேதவாக்கியங்கள் நிறைவேறும்:

1. "மரணமே! உன் கூர் எங்கே? பாதாளமே! உன் ஜெயம் எங்கே?" (1கொரிந்தியர் 15:55).

2. "நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார்" (பிலிப்பியர் 3:21).

3. "கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய (நித்திய) ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார்" (ரோமர் 8:11).

4. "தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார்" (ரோமர் 8:29).

5. "நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது, நீங்களும் அவரோடே கூட மகிமையிலே வெளிப்படுவீர்கள்" (கொலோசெயர் 3:4).

3. தமது சபைக்காகக் கிறிஸ்து மத்திய ஆகாயத்தில் வரும்பொழுது, உயிரோடிருக்கும் பரிசுத்தவான்களின் சரீரங்கள் மறுரூபம் அடையும் (4:15,17,18).

அ. வசனம் 15. "கர்த்தருடைய வார்த்தையை முன்னிட்டு". சபை எடுத்துக் கொள்ளப்படும் உபதேசத்தைப் பற்றிய வெளிப்படுத்தலை பவுல் நேரிடையாகப் பெற்றிருப்பார். அல்லது, இயேசுவால் உரைக்கப்பட்டதை ஆதிச்சபையினரின் வாய்மொழி மூலம் அறிந்திருக்கலாம்.

ஆ. வசனம் 15. "கர்த்தருடைய வருகை மட்டும் உயிரோடிருக்கும் நாம் நித்திரையடைந்தவர்களுக்கு முந்திக் கொள்வதில்லை". கர்த்தருக்குள் நித்திரையடைந்தவர்கள் எடுத்துக் கொள்ளப்படுவதில் மறக்கப்பட மாட்டார்கள். உண்மையில், இச்சம்பவத்தில் முதலிடம் அவர்களுக்கே! இவற்றைக் குறித்து கேட்பதற்கு தெசலோனிக்கேயர் ஆவல் கொண்டிருந்தனர். இது அவர்களுடைய முக்கிய கரிசனையாயிருந்தது.

இ. வசனம் 17. "பின்பு உயிரோடிருக்கும் நாமும் அவர்களோடே கூட ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்படு வோம்". "எடுத்துக் கொள்ளப்படுவது" என்பது சபையானது பூமியிலிருந்து உயர எடுத்துக் கொள்ளப்படு வதாகும். புதிய ஏற்பாட்டில் இந்த ஒரு இடத்தில்தான் சபை "எடுத்துக் கொள்ளப்படுவது" திட்டந்தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. இதன் பொருள், கைப்பற்றப்படுதல், இழுத்துக் கொள்ளப்படுதல், பலவந்தமாகக் கொண்டு செல்லுதல் என்பனவாகும். கர்த்தருக்குள் நித்திரையடைந்திருந்தவர்களும், சபை எடுத்துக்கொள்ளப்பட்ட போது உயிரோடிருந்தவர்களும் மீண்டும் ஒன்று சேருவார்கள். இவர்கள் எல்லாரும் தங்களுடைய மகிமையடைந்த சரீரங்களில் மீண்டும் ஐக்கியப்பட்டிருப்பர்கள். என்னவோர் மகிமை நிறைந்த நாள்! என்னவோர் அற்புத இரட்சகர்!

ஈ. வசனம் 17 "நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டு போக, மேகங்கள் மேல் அவர்களோடே கூட ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு...".

தமது சபைக்காக மத்திய ஆகாயத்தில் கர்த்தர் வரும் நாள் (சபை எடுத்துக் கொள்ளப்படுதல்) (1தெசலோனிக்கேயர் 4:13-18)

அர்மகெதோனில் அந்தி கிறிஸ்துவின் சேனைகள் அனைத்தையும் தோற்கடித்த பின்பு, தம்முடைய ராஜ்யத்தைப் பூமியில் ஸ்தாபிக்கும்படிக்கு இயேசு பூமிக்கு வருவார். அதுவரைக்கும் அவர் பூமிக்கு வரமாட்டார். எடுத்துக்கொள்ளப் பட்டப் பரிசுத்தவான்கள் மத்திய ஆகாயத்தில் சந்தித்து, பூமியின் மீது வரவிருக்கும் ஏழு வருட மகா உபத்திரவ காலத்தில் சபையோடு கூட வானத்திலிருப்பார். இவர்கள் தேவகோபாக்கினைக்கு நீங்கலாகியிருப்பார்கள். (ரோமர் 5:9; 1தெசலோனிகேயர் 5:9; 1:10; எபேசியர் 5:6). ஆட்டுக் குட்டியானவரால் மீட்கப்பட்டவர்கள் இவர்களே!

உ. வசனம் 17 "இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்போம்". "எப்பொழுதும்" என்பதின் அர்த்தம் "எல்லா நேரமும், என்றென்றும், நித்தியமாய்" என்பனவாகும் இது ஒவ்வொரு விசுவாசியும் "நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியமாகும்" (தீத்து 2:13; யோவான் 14:3).

ஊ. வசனம் 18. "இந்த வார்த்தைகளினாலே நீங்கள் ஒருவரையொருவர் தேற்றுங்கள்". "தேற்றுங்கள்" என்பதின் அர்த்தம், துக்கத்திலிருக்கும் ஒருவரை அருகில் அழைத்து, அவர்தம் துயர் துடைத்து, ஆறுதல்படுத்துவது என்பதாகும். தங்களின் மத்தியில் கர்த்தருக்குள் மரித்தவர்களுக்கு என்ன சம்பவிக்கும் என்பதைக் கண்டறியும்படி முயற்சித்துக் கொண்டிருந்த, தெசலோனிக்கேய விசுவாசிகளுக்கு, பவுலின் வார்த்தைகள் நிச்சயமாகத் தேறுதலாயிருந்திருக்கும்.

இன்றைக்கும் நம் மத்தியில் சபை எடுத்துக் கொள்ளப்படுவதை எதிர் நோக்கி ஜீவிப்பவர்கள் பவுலின் இவ்வார்த்தைகளினால் தேற்றப்படுவார்களாக.

முடிவுரை

அ. கிறிஸ்து தமது சபைக்காக மத்திய ஆகாயத்தில் வரும்பொழுது:

1. மரித்த விசுவாசிகள் ஆவிகளாக அவரோடு கூட வருவார்கள்.

2. மரித்த பரிசுத்தவான்களின் சரீரங்கள் மறுரூபமடைந்து, தங்கள் தங்கள் ஆவியுடன் இணைந்து, கர்த்தரைச் சந்திக்கும்படி எழும்புவார்கள்.

3. உயிரோடிருக்கும் பரிசுத்தவான்களின் சரீரங்களும் மறுரூபமடையும். அவர்களும் கர்த்தரைச் சந்திக்கும்படி எழும்புவார்கள்.

4. இவ்விரு கூட்டத்தாரும் சேர்ந்து, மத்திய ஆகாயத்தில் கர்த்தரைச் சந்தித்து, அவரோடு கூட நித்திய நித்தியமாயிருப்பார்கள்.

5. என்னவோர் ஆறுதல்! என்னவோர் தேறுதல்!.

ஆ. சபை எடுத்துக் கொள்ளப்படுவதைப் பற்றிய உபதேசம் இரண்டு காரியங்களைச் செய்ய வேண்டும்.

1. கர்த்தரைத் தேடி, கண்டு கொள்ளும்படி அவிசுவாசி களை ஊக்குவிக்க வேண்டும்.

2. கர்த்தரின் வருகையை எதிர்நோக்கியிருக்கும் விசுவாசிகளைப் பரிசுத்தமும், உத்தமுமாய் ஜீவிக்க வேண்டுமென ஊக்குவிக்க வேண்டும்.

தமது சபைக்காக ஆகாயத்தில் வெளிப்படும் கர்த்தருடைய வருகையின் காலம் (சபை எடுத்துக் கொள்ளப்படுதல்) (1தெசலோனிக்கேயர் 5:1-11).

முன்னுரை

அ. பவுல் 1தெசலோனிக்கேயர் 4:13-18 வசனங்களின் மூலம், ஏற்கெனவே கர்த்தருக்குள் நித்திரையடைந்தவர்களின் நிமித்தம் துக்கித்துக் கொண்டிருந்த தெசலோனிக்கேயர் விசுவாசிகள் சிலருக்குள் இருந்த பயத்தை அமர்த்துகிறார். அவர் கூறுவதாவது:

1. மரித்த பரிசுத்தவான்களின் ஆவிகள், சபை எடுத்துக்கொள்ளப்படுகையில் கிறிஸ்துவோடு கூட வரும்.

2. அப்பொழுது அவர்களின் சரீரங்கள் மறுரூபம் அடைந்து, வல்லமை, மகிமை, சாவாமை, அழியாமை உடையதாக மாறும்.

3. இவ்விதம் மகிமையடைந்த சரீரங்களுடன் அவர்களுடைய ஆவிகள் ஐக்கியப்பட்டு, ஆகாயத்தில் கிறிஸ்துவை சந்திக்கும்படி எழும்பும்.

4. பின்பு, உயிரோடிருக்கும் நாமும் மறுரூபமாக்கப்பட்டு, ஆகாயத்தில் கிறிஸ்துவைச் சந்திக்கும்படி சரீரத்திலும், ஆவியிலும் எழும்புவோம்.

ஆ. கிறிஸ்து தமது சபைக்காக வெளிப்படப்போவதைப் பற்றிய கருத்துக்கள் பரிமாறப்படும்பொழுது, வருகையின் காலம், நாள், முன் அடையாளங்கள் பற்றி கேள்விகள் எழும்புவது இயல்பு.

ஆதலால் பவுல் இவற்றைப் பற்றிய விவரங்களுடன் தனது விவாதத்தைத் தொடர்கிறார். சபையின் ஆதி சுவிசேஷக் காலத்தைப் போன்று, இன்றைய சபையும் "வருகையின் காலம், நாட்கள்" பற்றி அறிவதில் மிகவும் கரிசனை உடையவர்களாக இருப்பதால், இந்தப் போதனை பொருத்தமான தலைப்பாக உள்ளது.

1. தமது சபைக்காக ஆகாயத்தில் வெளிப்படும் கர்த்தரின் வருகை இரவிலே திருடன் வருகிற விதமாய் இருக்கும் (5:1-3).

அ. வசனம் 1. "இவைகள் நடக்குங் காலங்களையும், சமயங்களையும் குறித்து உங்களுக்கு எழுத வேண்டுவதில்லை" கிறிஸ்துவின் வருகையைப்பற்றி பவுல் பேசும்பொழுது, இவைகள் நடக்கும் "காலம்", "நேரம்" ஆகிய இரண்டையும் குறித்துப் பேசுகிறார்.

1. தமது சபைக்காகக் கிறிஸ்து மத்திய ஆகாயத்தில் வெளிப்படுவதற்கு முன் உள்ள கால அளவு.

2. தமது சபைக்காகக் கிறிஸ்து மத்திய ஆகாயத்தில் வெளிப்படவிருக்கும் குறித்த நேரம்

ஆ. வசனம் 2. "நீங்கள் நன்றாய் அறிந்திருக்கிறீர்கள்". இம்மாபெரும் சம்பவம் நடைபெறவிருக்கும் காலமும், சமயமும் அறியப்படாதவை என்பதை ஏற்கெனவே தெசலோனிக்கேயர் (மிகத் தெளிவாக, துல்லியமாக) அறிந்திருந்தனர். இயேசுவானவர் பரமேறுவதற்கு முன்னதாக தமது சீஷர்களுக்கு அருளிச் செய்த வார்த்தைகளுக்கு இது ஒத்ததாகும்.

தமது சபைக்காக ஆகாயத்தில் வெளிப்படும் கர்த்தருடைய வருகையின் காலம் (சபை எடுத்துக் கொள்ளப்படுதல்) (1தெசலோனிக்கேயர் 5:1-11).

"பிதாவானவர் தம்முடைய ஆதீனத்திலே வைத்திருக்கிற காலங்களையும், வேளைகளையும் அறிகிறது உங்களுக்கு அடுத்ததல்ல" (அப்போஸ்தலர் 1:7; மேலும் காண்க மாற்கு 13:32). பவுல் (ஒருவேளை தீமோத்தேயுவும்) இதைக் குறித்து முன்னரே அறிவித்திருக்கக் கூடும். பவுலும், தீமோத்தேயுவும் எதைப் போதித்தார்களோ அதைத் தொடர்ந்து விசுவாசிப்பது தான் தெசலோனிக்கேயரின் பிரச்சினையாயிருந்தது.

இ. தமது சபைக்காக மத்திய ஆகாயத்தில் கர்த்தர் வெளிப்படுவதோடு சம்பந்தப்பட்ட விசேஷித்த விளக்கங்கள், சமபங்களுடன் போதிப்பதாக உரிமை பாராட்டும் போதகர்களின் பின்னால் ஓடும் இன்றைய விசுவாசிகளின் நிலையும் இதுவே. இயேசு சீஷர்களுக்கு எதைப் போதித்தார், அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியினால் நடத்தப்பட்டு சபைக்கு எதைப் போதித்தார்கள் என்பதில் இவர்கள் குழப்பமுற்று, கேள்வி கேட்கிறவர்களாக மாறியுள்ளனர்.

ஈ. வசனம் 2. "இரவிலே திருடன் வருகிற விதமாய்க் கர்த்தருடைய நாள் வரும்". ஏற்கெனவே தெசலோனிக்கேயர் எதை அறிந்திருந்தார்களோ, வருகையைக் குறித்துப் பவுல் அவர்களுக்கு முன்னமே எதைப் போதித்திருந்தாரோ அவற்றை அவர் இப்பொழுது அவர்களுக்கு நினைப்பூட்டத் துவங்குகிறார். சபை எடுத்துக்கொள்ளப்படுவதை, "கர்த்தருடைய நாள்" எனப் பவுல் குறிப்பிடுகிறார். இது பழைய, புதியஏற்பாடுகளில் பயன்படுத்தப்பட்ட மேசியாவைப் பற்றிய வாசகமாகும். (ஆமோஸ் 5:18; ஏசாயா2:12; மல்கியா 3:2; மத்தேயு 24:43; லூக்கா 12:39).

உ. இவைகள் எப்பொழுது சம்பவிக்கும் என ஆவலுடன் வினவிய சீஷர்களுக்குப் பிரதியுத்தரமாக, "நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார்" என இயேசு கூறினார். (மத்தேயு 24:44). இதையே நமக்கும் சொல்கிறார். இரவில் எதிர்பாராத வேளையில் திருடன் வருவதுபோல, கர்த்தருடைய நாள் வரும். பேதுருவும் இவ்விதம் கூறுகிறார். "கர்த்தருடைய நாள், இரவிலே திருடன் வருகிற விதமாய் வரும்" (2பேதுரு 3:10).

ஊ. வசனம் 3. "சமாதானமும் சவுக்கியமும் உண்டென்று அவர்கள் சொல்லும் போது.... அழிவு சடிதியாய் அவர்கள் மேல் வரும்". இங்கே "அவர்கள்" எனக் குறிப்பிடுவது அவிசுவாசிகளே. அவர்கள், "எல்லாம் சவுக்கியமாயிருக்கிறது, எல்லாம் நன்றாயிருக்கிறது, திகிலூட்டும்படியாக ஒன்றுமில்லை, ஒருவரும் அசைக்கப்படுவதோ அல்லது தொல்லைப்படுத்தப்படுவதோ இல்லை" என்று கூறி கொண்டிருப்பார்கள். இவர்கள் சூழ்நிலையின் யதார்த்தத்தைக் கிரகித்துக்கொள்ளக் கூடாதவர்கள்! வெகுவிரைவில் ஏற்படவிருக்கும் அழிவைப் பற்றி சற்றேனும் உணராதவர்களாக உள்ளனர்.

எ. இங்கே "அழிவு" எனப்படுவது தேவ சமுகத்திலிருந்து துரத்தப்படுவதாகும். கர்ப்பவதியானவளுக்கு சடிதியாய் வேதனை வருகிறதைப் போல, முன் எச்சரிப்பின்றி தேவனிடமிருந்து அவிசுவாசிகள் என்றென்றுமாய்ப் பிரிக்கப்படுவார்கள். வாழ்க்கையின் இரண்டு முடிவுகள் மாத்திரமே உள்ளன.

1. கிறிஸ்துவோடுள்ள நித்திய ஜீவன்.

2. தேவனிடமும், கிறிஸ்துவிடமுமிருந்து நித்தியமாகப் பிரிக்கப்பட்டு வாதிக்கப்படுதல்.

மானிடர் ஒவ்வொருவருக்கும் இவ்விரண்டில் ஒன்று தவிர்க்க முடியாதது!.

ஒவ்வொருவரும் நிறைவேற்ற வேண்டிய தெரிந்துகொள்ளுதலும் இதுவே!.

தமது சபைக்காக ஆகாயத்தில் வெளிப்படும் கர்த்தருடைய வருகையின் காலம் (சபை எடுத்துக் கொள்ளப்படுதல்) (1தெசலோனிக்கேயர் 5:1-11).

2. தமது சபைக்காக ஆகாயத்தில் வெளிப்படும் கர்த்தரின் வருகையின் நாள் அவருடைய ஜனங்களைப் பிடித்துக் கொள்ளாது (5:4,5).

அ. வசனம் 4. "சகோதரரே, நங்கள் அந்தகாரத்தில் இருக்கிறவர்களல்லவே" அந்தகாரத்தில் இருப்பது என்பது, நெறிமுறைப்படியும், ஆவிக்கேற்றபடியும் தேவனிடமிருந்து பிரிக்கப்படுதல் என்பதாகும். விசுவாசிகள் ஓர்போதும் அந்தகாரத்தில் இருப்பதில்லை. அவர்களின் மனது ஓர் போதும் இருளும், தீங்குமான உலகப் பொருட்களின் மேல் பதிக்கப்படுவதில்லை. அவர்களின் மனம் உலகத்தின் ஒளியாகிய கிறிஸ்துவின் மீதும், அவருடைய வருகையின் மீதுமே பதிக்கப்பட்டுள்ளது (யோவான் 1:5, அப்போஸ்தலர் 26:18; 1 தெசலோனிக்கேயர் 4:16).

ஆ. வசனம் 4 "அந்த நாள் திருடனைப் போல உங்களைப் பிடித்துக்கொள்ளத்தக்கதாக" தமது சபைக்காக ஆகாயத்தில் கர்த்தர் வரும் நாள், அவிசுவாசிகளைப் பிடித்துக்கொள்வதைப் போல, விசுவாசிகளைப் பிடித்துக் கொள்ளாது. கிறிஸ்து மீண்டும் வந்து, தங்களை அவரோடு கூட நித்திய வாசஸ்தலத்துக்கு எடுத்துச் செல்வார் என அவர்கள் எதிர்நோக்கி யிருக்கின்றனர் (யோவான் 14:3; 5:28,29; மத்தேயு 16:27; அப்போஸ்தலர் 1:11). ஆதலால் திருடனைப் போல அந்நாள் அவர்களைப் பிடித்துக் கொள்ளாது.

இ. வசனம் 5 "நீங்களெல்லாரும் வெளிச்சத்தின் பிள்ளைகளும், பகலின் பிள்ளைகளுமாயிருக்கிறீர்கள்". "வெளிச்சத்தின் பிள்ளைகள்" என்பதின் அர்த்தம், உலகத்தில் உதித்த மெய்யான ஒளியாகிய கிறிஸ்துவைப் போலிருத்தல் என்பதும்; அவர் நம்மில் அன்புகூருவது போல, நாமும் பிறரை நேசிக்க வேண்டும் என்பதுமாகும் (யோவான் 1:7-9; 1யோவான் 2:8-10). "பகலின் பிள்ளைகள்" என்பதின் அர்த்தம், நன்னெறிப்படியும், ஆவிக்கேற்றபடியும் நன்மையும், செவ்வையுமான விதத்தில் விசுவாசிகள் நடந்து கொள்ளுதல் என்பதாகும். இவ்விதம் நடந்து கொள்ளுவார்களானால், பகற்கால வெளிச்சத்தில் எல்லோரும் இவர்களைக் கண்டு பிதாவை மகிமைப்படுத்துவார்கள்.

3. தமது சபைக்காக ஆகாயத்தில் வெளிப்படும் கர்த்தரின் வருகையானது, நாம் விழிப்புள்ளவர்களாயிருக்கும்படிக்கும், சுயக்கட்டுப்பாடான வாழ்க்கையைச் செய்யும் படிக்கும் நம்மை ஊக்குவிக்கிறது (5:6-8).

அ. வசனம் 6 "மற்றவர்கள் தூங்குகிறது போல நாம் தூங்காமல்" "மற்றவர்கள்" என்பது அவிசுவாசிகளைக் குறிப்பிடுகிறது. அவர்கள் சன்மார்க்கத்தின்படியும், ஆவிக்கேற்றபடியும் தூங்குகிறவர்களாகவும், மரித்தவர்களாகவும் இருக்கிறார்கள் (மாற்கு 13:36; எபேசியர் 5:14). கிறிஸ்துவின் வருகையை அவர்கள் எதிர்நோக்குவதில்லை. மரித்தோரின் உயிர்த்தெழுதலைப் பற்றிய நம்பிக்கையும் அவர்களுக்கில்லை.

ஆ. வசனம் 6 "நாம் விழித்துக்கொண்டு தெளிந்தவர்களாய் (சுயக்கட்டுப்பாடுள்ளவர்களாய்) இருக்கக் கடவோம்" விழிப்புள்ளவர்களாக வாழ மனஉறுதி உடையவர்களே கிறிஸ்தவர்கள். இவர்கள் தொடர்ந்து சன்மார்க்கத்துடன் ஆவிக்குரியவிழிப்புடையவர்களாய் இருக்கின்றனர். மேலும், இவர்கள் எல்லா விதத்திலும் மிதமிஞ்சினவைகளைத்தவிர்த்து, சுயகட்டுப்பாடுடன் வாழ்கின்றனர். 1கொரிந்தியர் 6:12-இல் "நான் ஒன்றிற்கும் அடிமைப்படமாட்டேன்" என அப்போஸ்தனாகிய பவுல் கூறுகிறார். அவர் இவ்விதம் சொல்வதின் அர்த்தம், "சுயகட்டுப்பாட்டுடன் இருங்கள்" என்பதே.

தமது சபைக்காக ஆகாயத்தில் வெளிப்படும் கர்த்தருடைய வருகையின் காலம் (சபை எடுத்துக் கொள்ளப்படுதல்) (1தெசலோனிக்கேயர் 5:1-11).

இ வசனம் 7 "தூங்குகிறவர்கள்... வெறிகொள்ளு கிறவர்கள்... இராத்திரியிலே". தூங்குவதும், வெறிகொள்ளுவதும் இரவில் மேற்கொள்ளப்படும் செயல்களே. (அப்போஸ்தலர் 2:15). சன்மார்க்கத்தின்படியும், ஆவிக்கேற்றபடியும் தூங்குகிறவர்கள், பொதுவாகத் தங்களின் செயல்களை இரவின் ஒளிப்பிடத்தில் நடப்பிக்கின்றனர்! அவைகள் வெளியாகும்படிக்கு இவர்கள் விரும்புவதில்லை (யோவான் 3:20).

ஈ. வசனம் 8 "பகலுக்குரியவர்களாகிய நாமோ". மறுபக்கத்தில், விசுவாசிள் பகற்கால வெளிச்சத்தில் கிரியை நடப்பிக்கிறார்கள். பொல்லாங்கனுடைய திட்டங்களிலும், அக்கினியாஸ்திரங்களிலுமிருந்து தங்களைப் பாதுகாக்கும் படியான கிரியைகளில் இவர்கள் ஈடுபட்டுள்ளனர் (எபேசியர் 6:11-18). இவர்கள்:

1. சுயகட்டுப்பாடு உடையவர்கள்-ஒழுக்கக் கேடுகளைத் தவிர்த்து, எல்லாவற்றையும் அளவோட அனுபவித்து, மிதமிஞ்சியவை அனைத்தையும் ஒழிக்கின்றனர்.

2. விசுவாசம், அன்பு என்னும் மார்க்கவசத்தைத் தரித்தவர்கள்- தொடர்ந்து கிறிஸ்துவையே சார்ந்திருப்பதை வெளிப்படுத்தவும், அறிக்கையிடவும் செய்கின்றனர். தங்களின் இந்த விசுவாசத்தை சகோதர சிநேகத்தின் கிரியைகள் மூலம் வெளிப்படுத்துகின்றனர்.

3. இரட்சிப்பின் நம்பிக்கையென்னும் தலைச் சீராவையும் தரித்தவர்கள் கிறிஸ்துவோடு உள்ள இரட்சண்ய உறவைக் காக்கின்றனர். பூமிபனைத்தின் மேலும் வரவிருக்கும் தேவ கோபாக்கினையிருந்துவிடுதலையாக்கப்படும்படிக்கு இவர்கள் எதிர்பார்க்கின்றனர்.

உண்மையானவிசுவாசியின் குணாசீலங்கள் இவைகளாகும்.இவரதுவாழ்வில்நிலைத்திருப்பவைகள் இவைகளே. இருளில் உள்ளவர்களிடமிருந்தும், இரவில் தூங்கி வெறிகொள்ளுகிறவர்களிடமிருந்தும்இவர்களைப் பிரிக்கும் மனமும், வாழ்க்கைப் பாணியும் இவைகளே.

4. தமது சபைக்காக ஆகாயத்தில் வெளிப்படும் கர்த்தருடைய வருகை, உலகம் அனைத்தின் மேலும் வரவிருக்கும் தேவகோபாக்கினை யிலிருந்து நம்மை விடுதலையாக்கும் (5:9-11).

அ. வசனம் 9, "தேவன் நம்மைக் கோபாக்கினைக் கென்று நியமிக்காமல்." இங்கே தேவகோபாக்கினை தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன் அர்த்தம், "சீற்றங்கொள்ளுதல், வெறுப்பு, தண்டிக்கும்படியான சினம் அல்லது பழி வாங்குதல்" என்பனவாகும். கிறிஸ்துவின் மூலம் உலகத்துக்குத் தேவன் அருளும் இரட்சிப்பின் சுவிசேஷத்தை மறுதலிப்பவர்களின் மீது தேவகோபாக்கினைஊற்றப்படும்.தேவகோபாக்கினையில் இவையும் அடங்கும்

1. தற்போதுள்ள வேதனைப்படும் இடமாகிய பாதாளம், மரித்த துன்மார்க்கரின் தற்போதைய இடம் (லூக்கா 16:23-25;28).

2. வெளிப்படுத்தலில் விவரிக்கப்பட்டுள்ள ஏழு வருட மகா உபத்திரவம் (அதிகாரம் 6:19).

3. "வெள்ளைச் சிங்காசன நியாயத்தீர்ப்பில்" நித்திய நரக அக்கினியில் (அக்கினிக் கடல்) தள்ளப்படுதல் (வெளிப்படுத்தின விசேஷம் 20:11-15).

தமது சபைக்காக ஆகாயத்தில் வெளிப்படும் கர்த்தருடைய வருகையின் காலம் (சபை எடுத்துக் கொள்ளப்படுதல்) (1தெசலோனிக்கேயர் 5:1-11).

இருப்பினும், விசுவாசிகள் இதில் பங்கடைவதில்லை என்பது தேவனால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவர்கள் தேவகோபாக்கினைக் கென்று நியமிக்கப்படவில்லை (1தெசலோனிக்கேயர் 1:10; ரோமர் 5:9; எபேசியர்5:9).

ஆ. வசனம் 9. "கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமாய் இரட்சிப்படைவதற்கென்று நியமித்தார்". கிறிஸ்துவிலுள்ள விசுவாசத்தின் மூலம் தேவகோபாக்கினையிலிருந்து நீங்கலாக்கப்பட்டு, பாதுகாப்பான இடத்தைப் பெற்றுக் கொள்ளும்படி விசுவாசிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இ. வசனம் 10 "நாம் விழித்திருப்பவர்களானாலும், நித்திரை யடைந்தவர்களானாலும் அவருடனே கூட நாம் ஏகமாய்ப் பிழைத்திருப்போம்" நாம் உயிரோடிருந்தாலும், மரித்தவர்களாயிருந்தாலும் ஒருவராலும் நம்மைவிட்டு எடுத்துப்போட முடியாத ஐக்கியம் கிறிஸ்துவோடு கூட நமக்குண்டு. பவுல் ரோமருக்கு இவ்விதம் எழுதுகிறார்: "மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும், அதிகாரங்களானாலும்... வேறெந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பை விட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன்" (ரோமர் 8:38,39).

இ. வசனம் 11 "ஒருவரையொருவர் தேற்றி ஒருவருக்கொருவர் பக்திவிருத்தி உண்டாகும்படி செய்யுங்கள்".

1. தேவகோபாக்கினைக்கு நீங்கலாகி பாதுகாப்பான ஸ்தலம் அருளப்படுவதும்,

2. தமது சபைக்காக இயேசுவானவர் சீக்கிரமாக வருகிறார் என்பதை அறிவதும்,

3. மத்திய ஆகாயத்தில் வெளிப்படப்போகும் கிறிஸ்துவையும், கர்த்தருக்குள் மரித்த நம்முடைய அருமையானவர்களையும் சந்திப்போம் என்ற நிச்சயமும்,

ஒவ்வொரு விசுவாசிக்குமுள்ள தேறுதலும், தைரியமும் ஆகும். இது நம் விசுவாசத்தைப் பெலப்படுத்துகிறது. இதைக்குறித்து, விசேஷமாக, பலவிதமான உபத்திரவங் களையும், சோதனைகளையும் சகிப்பவர்களைப் பற்றி ஒருவருக்கொருவர் அடிக்கடி பேசவேண்டும்.

முடிவுரை

அ. தமது சபைக்காக ஆகாயத்தில் கிறிஸ்து வெளிப்படுவதற்கு முன்னதாக உள்ள கால அளவு இன்னதென நாமறியோம். இச்சம்பவம் நிகழவிருக்கும் குறிப்பிட்ட வேளையையும் நாமறியோம்.

ஆ. இருப்பினும், இச்சம்பவத்தைக் குறித்த திட்டவட்டமான சில விஷயங்களை நாமறிவோம். அவை.

1. இரவிலே திருடன் வருகிற விதமாய்க் கர்த்தருடைய நாள் வரும்.

2. கிறிஸ்துவுக்குள் வாழ்பவர்களை அந்த நாள் பிடித்துக்கொள்ளாது.

3. விசுவாசிகள் விழிப்புடனிருந்து, சுயக்கட்டுப்பாடான ஜீவியஞ் செய்யும்படி ஊக்குவிக்கப்படவேண்டும்.

தமது சபைக்காக ஆகாயத்தில் வெளிப்படும் கர்த்தருடைய வருகையின் காலம் (சபை எடுத்துக் கொள்ளப்படுதல்) (1தெசலோனிக்கேயர் 5:1-11).

4. உலகம் அனைத்தின் மேலும் வரப்போகும் தேவகோபாக்கினையிலிருந்து நம்மை விடுவிக்கும்.

இ. இவ்விரண்டில் ஏதாகிலும் ஒன்று ஒவ்வொரு நபருக்கும் சம்பவிக்கும்:

1. கிறிஸ்துவோடுள்ள நித்திய ஜீவன்.

2. தேவனிடமிருந்தும், கிறிஸ்துவிடமிருந்தும் நித்தியமாகப் பிரிக்கப்பட்டு வாதிக்கப்படுதல்!

"இது ஒவ்வொரு தனி நபராலும் தெரிந்து கொள்ளப்படவேண்டிய ஒன்று" என நான் கூறுவதை நீங்கள் நினைவுகூரவேண்டும். நீங்கள் தீர்மானித்துவிட்டீர்களா? நீங்கள் எதைத் தெரிந்து கொண்டீர்கள்? கிறிஸ்துவோடுள்ள நித்திய ஜீவனா, அல்லது தேவனிடமிருந்தும், கிறிஸ்துவிடமிருந்தும் நித்தியமாகப் பிரிக்கப்பட்டு வேதனைப்படுவதா?